முரசு : 14 ஒலி: 2
8 பக்கங்கள் விலை: 500 காசுகள்
MALAI MURASU
TN/WR/SLM(E)27/2024-2026
RNI Regn. No. TNTAM/2016/75064

# மாலை முரசு

சேலம்

WWW.MALAIMURASU.COM
வெள்ளிக்கிழமை
07-02-2025 (தை-25)
★★

திருநெல்வேலி அல்வாவை விட மத்திய அரசின் அல்வா 'பேமஸ்':

# தமிழகத்துக்கு நீதியும் இல்லை; நிதியும் தருவதில்லை!




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று திருநெல்வேலியில் நடைபெற்ற அரசு விழாவில், 75,151 பயனாளிகளுக்கு 167 கோடி ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்த விழாவில், சபாநாயகர் அப்பாவு, அமைச்சர்கள் துரைமுருகன், கே.என்.நேரு, சாத்தூர் ராமச்சந்திரன், கே.ஆர்.பெரியகருப்பன், அனிதா ராதாகிருஷ்ணன், கீதா ஜீவன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## நெல்லை அரசு விழாவில் முதல்வர் ஸ்டாலின் பரபரப்பு பேச்சு!!

நெல்லை, பிப்.07–

தமிழகத்துக்கு நீதியும் இல்லை நிதியும் தருவது இல்லை. திருநெல்வேலி அல்வாவை விட மத்திய அரசு தரும் அல்வா மிகவும் பேமஸ் ஆக உள்ளது என நெல்லை அரசு விழாவில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் மத்திய அரசை கடுமையாக தாக்கி பரபரப்பாக பேசினார்.

நெல்லை பாளையங்கோட்டையில் அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்துள் இன்று காலை அரசு விழா நடைபெற்றது. இதில், 75 ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகளை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வழங்கினார். மேலும், பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும், தொடங்கியும் வைத்தார்.

பின்னர், விழாவில் அவர் பேசியதாவது:–

2023ஆம் ஆண்டு டிசம்பரில் எப்படிப்பட்ட கனமழை பெய்தது என்று உங்களுக்கு தெரியும். அதனால், திருநெல்வேலி, தென்காசி, கன்னியாகுமரி, தூத்துக்குடி உள்ளிட்ட தென் மாவட்டங்கள் எப்படியெல்லாம் கடுமையாக பாதிக்கப்பட்டது என்றும் உங்களுக்கு நன்றாக தெரியும். அந்த பாதிப்புகளிலிருந்து மீள, ஒன்றிய அரசிடம் நாங்கள் நிதி கேட்டோம். இரண்டு ஒன்றிய அமைச்சர்கள் வந்தார்கள். ஆனால், அவர்கள் உடனடியாக இடைக்கால நிதி உதவியைக் கூட செய்யவில்லை. நம்முடைய நயினார் நாகேந்திரன் அவர்கள் கோபித்துக் கொள்ளக் கூடாது. அவருக்கும் உண்மை தெரியும்.

6–ம் பக்கம் பார்க்க

தமிழக மீனவர்கள் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண

## டெல்லியில் தி.மு.க. எம்.பி.க்கள் போராட்டம்!

### பாராளுமன்ற வளாகத்தில் நடந்தது!!

புதுடெல்லி, பிப்.07–

தமிழக மீனவர்கள் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண வலியுறுத்தி டெல்லியில் பாராளுமன்ற வளாகத்தில் தி.மு.க. எம்.பி.க்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கை கடற்படையினரால் தமிழ்நாடு மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்பட்டு வருவதை கண்டித்து டெல்லி நாடாளுமன்ற வளாகத்தில் தி.மு.க துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி எம்.பி. தலைமையில் இன்று போராட்டம் நடைபெற்றது. தி.மு.க எம்.பிக்கள் மற்றும் கூட்டணிக் கட்சி எம்.பிக்கள் கலந்து கொண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். தமிழ்நாடு மீனவர்கள் இதுபோன்று கைது செய்யப்படுவதை நிறுத்தவும், இலங்கையின் கட்டுப்பாட்டிலுள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப்படகுகளையும் விடுவிக்க வழி செய்யும் வகையில், உடனடியாக உயர்மட்ட தூதரக நடவடிக்கைகளை வலியுறுத்தி போராட்டம் நடத்தப்பட்டது.

மீனவர்களின் கைதுக்கு நிரந்தர தீர்வு வேண்டும், தமிழ்நாடு மீனவர்களை விடுதலை செய் என முழக்கமிட்டு மத்திய பா.ஜ.க அரசைக் கண்டித்து எம்.பி.க்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். பின்னர் செய்தியாளர்களிடம் தி.மு.க. எம்.பி. கனிமொழி கூறியதாவது:

"இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்களை கைது செய்து துன்புறுத்தி வருகின்றனர். தற்போது கிட்டத்தட்ட 97 தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். முதல்வர் மு.க. ஸ்டாலின் அமைச்சருக்கும் பிரதமருக்கும் கடிதம் எழுதியுள்ளார். அவர் இங்கு வரும் ஒவ்வொரு முறையும், இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண பிரதமரிடம் வலியுறுத்துகிறார்.

இலங்கை கடற்படையினர் நமது மீனவர்களின் கிட்டத்தட்ட 210 படகுகளை எடுத்துச் சென்றுள்ளனர். அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு வருகிறது. மீனவர்கள் தங்கள் படகுகள் இல்லாமல் என்ன செய்ய முடியும்? இது தமிழ்நாட்டில், குறிப்பாக மீனவர்களுக்கு ஒரு பெரிய பிரச்சினையாக மாறி வருகிறது. அவர்களின் முழு வாழ்வாதாரம், குடும்பம் மற்றும் அனைத்தும் பாதிக்கப்பட்டுள்ளன.

மீனவர் குழுக்களிடையே பேச்சுவார்த்தை நடத்தி இந்தப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்க குழுக்களை அமைப்பதாக உறுதியளித்த மத்திய அரசு, இதுவரை இது குறித்து எதுவும் செய்யவில்லை. கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுவிக்கவேண்டும் என்பதே எங்கள் கோரிக்கை. அவர்களை விடுவிக்க அவர்கள் அழுத்தம் கொடுக்க வேண்டும். நீதி நிலைநாட்டப்பட வேண்டும்.

சிறைபிடிக்கப்பட்ட படகுகளை விடுவிக்க வேண்டும். மத்திய அரசு இலங்கை அரசுடன் பேசி இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டும்" என்று தெரிவித்தார். முன்னதாக, மீனவர் பிரச்சினை பற்றி விவாதம் நடத்த வேண்டும் என வலியுறுத்தி தி.மு.க. நாடாளுமன்ற குழுத் தலைவர் கனிமொழி நோட்டீஸ் அளித்தார்.

ஜனாதிபதி நிறுத்தி வைத்தால் கிடப்பிலேயே இருக்குமா?

## மசோதா விவகாரத்தில் ஆளுநர் முட்டுக்கட்டையாக இருக்க முடியாது!

### தமிழக கவர்னருக்கு உச்சநீதிமன்றம் கண்டனம்!!

புதுடெல்லி, பிப்.07–

மசோதா விவகாரத்தில் ஆளுநர் முட்டுக்கட்டையாக இருக்க முடியாது என்று உச்சநீதிமன்றம் இடித்துரைத்துள்ளது. ஜனாதிபதி மசோதா மீது முடிவெடுக்காமல் நிறுத்தி வைத்தால் அது அப்படியே கிடப்பில் இருக்குமா என்றும் உச்சநீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.

தமிழக அரசுக்கும், கவர்னர் ஆர்.என்.ரவிக்கும் இடையே தொடர்ந்து மோதல் நடந்து வருகிறது. குறிப்பாக தமிழ்நாடு அரசு சட்டமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பும் மசோதாக்களுக்கு உடனடியாக ஒப்புதல் அளிக்காமல் காலதாமதம் செய்து வருகிறார் என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர்களை நியமனம் செய்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து துணைவேந்தர் நியமனம் உள்ளிட்ட பல்வேறு மசோதாக்களுக்கு கவர்னர் ஒப்புதல் வழங்க உத்தரவிடக்கோரி தமிழ்நாடு அரசு சார்பில் உச்சநீதிமன்றத்தில் ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு உள்ளன.

இந்த வழக்குகளை நீதிபதிகள் ஜே.பி.பார்திவாலா, ஆர்.மகாதேவன் அடங்கிய அமர்வு விசாரித்து வருகிறது. கடந்த 2 நாட்களுக்கு முன்பு நடந்த விசாரணையின்போது, கவர்னருக்கு உச்சநீதிமன்றம் சில அறிவுறுத்தல்களை கூறியிருந்தது. இதற்கிடையே நேற்று மீண்டும் விசாரணை நடைபெற்றது. அப்போது தமிழக பல்கலைக்கழகங்களில் துணை வேந்தர்களை நியமிப்பதில் சிக்கல் நீடித்து வருகிறது. இதுதொடர்பான மசோதாக்களுக்கு 3 ஆண்டுகளாக பதில் அளிக்காதது ஏன்? என்று தமிழக கவர்னருக்கு, உச்சநீதிமன்றம் சரமாரியாக கேள்வி எழுப்பியது. மேலும் விசாரணை இன்றும் (வெள்ளிக்கிழமை) தொடரும் என்று உச்சநீதிமன்றம் தெரிவித்தது.

அதன்படி, இந்த வழக்கு விசாரணை நீதிபதிகள் ஜே.பி.பார்திவாலா, ஆர். மகாதேவன் அடங்கிய அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள் கவர்னர் எதுவும் விளக்கமளிக்காமல் மசோதாவை திரும்ப அனுப்பினால், அவர் மனத்தில் என்ன இருக்கிறது என்பது எப்படி தெரியும்?. சம்பந்தப்பட்ட மசோதாவில் என்ன மாற்றம் செய்ய வேண்டும் என்பதை அவர் தெரிவிக்கவில்லை என்றால் அரசுக்கு எப்படி தெரியும்?. சம்பந்தப்பட்ட மசோதா மீது தான் ஒப்புதல் கொடுக்க முடியாது என்பதை எப்படி கவர்னர் உணர்ந்தார்?. இந்த கேள்விகளுக்கு விளக்கம் அளியுங்கள் என கவர்னர் தரப்புக்கு நீதிபதிகள் அறிவுறுத்தினர்.

அதற்கு கவர்னர் தரப்பில் ஆஜரான வக்கீல், துணைவேந்தர் நியமனத்தில் தமிழ்நாடு அரசு கொண்டு வந்த நடைமுறை மத்திய சட்ட விதிமுறைகளுக்கு எதிராக உள்ளது. அவற்றுக்கு கவர்னர் எவ்வாறு ஒப்புதல் அளிப்பார்? என்றார்.

அப்போது குறுக்கிட்ட நீதிபதிகள், பல்கலைக்கழக மசோதா மத்திய சட்டத்துக்கு எதிராக இருந்தால் அடுத்த நடவடிக்கை என்ன? மாநில அரசு எப்படி செயல்படும் என்று நினைக்கிறீர்கள்? கவர்னர் அரசுக்கு முட்டுக்கட்டையாக உள்ளார். மசோதா

3–ம் பக்கம் பார்க்க

மணப்பாறையில் தனியார் பள்ளியில் 4 ம் வகுப்பு மாணவிக்கு பாலியல் தொல்லை

## பள்ளி நிர்வாகிகள், தலைமையாசிரியை உள்பட 5 பேர் கைது!

### பள்ளியை சூறையாடிய பொதுமக்கள் சாலை மறியல்!!

மணப்பாறை, பிப்.07–

மணப்பாறையில் தனியார் பள்ளியில் 4 ம் வகுப்பு மாணவிக்கு பாலியல் தொல்லை பள்ளி நிர்வாகிகள் உள்பட 4 பேர் கைது, பள்ளியை சூறையாடிய பொதுமக்கள் சாலை மறியல், பள்ளியின் தலைமை ஆசிரியர் காவல் நிலையத்தில் சரணடைந்தார்.

திருச்சி மாவட்டம், மணப்பாறையில் உள்ள மணப்பாறைபட்டி சாலையில் தனியார் மெட்ரிக், மற்றும் தனியார் சிபிஎஸ்இ பள்ளி ஒன்று செயல்பட்டு வருகின்றது. இந்த பள்ளியில் பயின்ற 4 ம் வகுப்பு மாணவி பள்ளிக்கு வழக்கம் போல் சென்ற நிலையில் மதிய நேரத்தில் வகுப்பறையில் இருந்த மாணவியிடம் பள்ளியின் தாளாளர் சுதாவின் கணவர் வசந்தகுமார் (54) என்பவர் பாலியல் சீண்டலில் ஈடுபட்டதாக கூறப்படுகின்றது. இதையடுத்து மாலையில் பள்ளி முடித்து விட்டு வீட்டிற்கு சென்ற மாணவி நடந்த சம்பவத்தை பெற்றோரிடம் கூறி உள்ளார். இதனால் அதிர்ச்சி அடைந்த பெற்றோர் மற்றும் உறவினர்கள் பள்ளிக்கு சென்று வசந்தகுமாரை தர்ம அடி கொடுத்தனர்.

மேலும் சம்பவம் பற்றி தகவல் அறிந்த மணப்பாறை போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை நடத்தியதுடன் வசந்த குமாரை மணப்பாறை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். இந்நிலையில் பாலியல் சீண்டலில் ஈடுபட்ட நபர் மற்றும் பள்ளி நிர்வாகிகள் மீது உடனடியாக நடவடிக்கை எடுத்திட வலியுறுத்தி மாணவியின் தந்தை உறவினர்கள் உள்ளிட்ட நூற்றுக்கணக்கானோர் பள்ளி முன்பு திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டதோடு ஆத்திரத்தில் பள்ளிக்குள் புகுந்து அலுவலக அறையின் கண்ணாடியை அடித்து நொருக்கினர். மேலும் அங்கிருந்த காரின் கண்ணாடியையும் உடைத்து நொறுக்கியதோடு காரை கவிழ்த்தனர். இதனால் அங்கு பெரும்

3–ம் பக்கம் பார்க்க



சேலம் மாவட்டம், தலைவாசலில் ஊராட்சி ஒன்றியதிற்குட்பட்ட தேவியாக்குறிச்சியில் இன்று நடைபெற்ற "மக்களுடன் முதல்வர்" 3–ம்கட்டதிட்டமுகாமினைஅமைச்சர்சி.வி.கணேசன்பார்வையிட்டார். உடன்மாவட்டகலெக்டர்பிருந்தாதேவி, முன்னாள் எம்.எல்.ஏ. எஸ்.ஆர்.சிவலிங்கம் உள்பட பலர் உள்ளனர்.

# ராசி பலன்

## 09.02.2025 முதல் 15.02.2025 வரை (தை 27 முதல் மாசி 03 வரை)

பரம்பரை ஜோதிடர் பெருங்குளம் ராமகிருஷ்ணன் 7845119542

| | | | |
|---|---|---|---|
| சுக்கி ராகு | | குரு(வ) | சந் செவ்(வ) |
| புதன் சனி | கிரகநிலை 09.02.2025 | | |
| சூர் | | | |
| | | | கேது |

**மேஷம்** (அஸ்வினி, பரணி, கார்த்திகை 1-ம் பாதம்)

இந்த வாரம் எத்தனை தடை வந்தாலும்எடுத்தகாரியத்தை செய்து முடிப்பதில் ஆர்வம் காண்பீர்கள். விரும்பிய காரியங்களை செய்து சாதகமான பலன் கிடைக்க பெறுவீர்கள். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்கள் சாதகமாகநடந்து முடியும். பெண்களுக்கு எடுத்த காரியங்களில் சாதகமான பலன் கிடைக்கும். அரசியல்வாதிகள் எதிர்ப்புகளையும் மீறி முன்னேறுவர். சகாக்கள் மத்தியில் ஆதரவு பெருகும். கலைத்துறையினரின் படைப்புத் திறன் வளரும். பொது நிகழ்ச்சிக்கு தலைமை தாங்குமளவுக்குப் பிரபலமாவார்கள்.நல்லவாய்ப்புகள்வரும்.மாணவர்களுக்கு கல்வியில் எதிர்பார்த்த உயர்வு கிடைக்கும். உற்சாகமாக காணப்படுவீர்கள்.

பரிகாரம்: தேவி கருமாரியம்மனை வணங்கி வர எல்லா பிரச்சினைகளிலும் நல்ல தீர்வு கிடைக்கும். கஷ்டங்கள் நீங்கும்.

**துலாம்** (சித்திரை 3, 4-ம் பாதம், சுவாதி, விசாகம் 1, 2, 3-ம் பாதம்):

இந்த வாரம் நோய்கள் நீங்கி உடல் ஆரோக்கியம் பெறும்தொழில் வியாபாரம் தொடர்பான பயணங்கள் மேற்கொள்ளவேண்டிஇருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு அலுவலக பணி தொடர்பான அலைச்சல் இருக்கும். குடும்பத்தில் உங்களது பேச்சுக்கு எதிர் பேச்சு பேசியவர்கள் அடங்கி விடுவார்கள். பெண்களுக்கு இருந்த முட்டுகட்டைகள்விலகும். கலைத்துறையினருக்கு அடுத்தவரிடம் உங்களது செயல்திட்டங்களை பற்றி கூறுவதை தவிர்ப்பது நல்லது. அரசியல்வாதிகளுக்கு மேலிடம் கூறுவதை கேட்டு தடுமாற்றம் அடையலாம். நிதானமாக யோசித்து செய்வது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் திறமை வெளிப்படும். கல்வியில் வெற்றி பெற தேவையான உதவிகள் கிடைக்கும்.

பரிகாரம்: நவகிரகத்தில் சுக்கிரனுக்கு தீபம் ஏற்றி வணங்க குடும்பத்தில் ஒற்றுமை உண்டாகும். மனமகிழ்ச்சி ஏற்படும்.

**ரிஷபம்** (கார்த்திகை 2, 3, 4-ம் பாதம், ரோகிணி, மிருகசீரிஷம் 1, 2-ம் பாதம்)

இந்த வாரம் எவ்வளவு திறமையுடன் செயல்பட்டாலும் திட்டமிடாவிட்டால் காரிய தடங்கலை ஏற்படுத்தும். தொழில் வியாபாரம் தொடர்பானகாரியங்களில்இழுபறியானநிலைகாணப்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலகம் தொடர்பான பணிகளில் முழுமூச்சுடன் செயல்பட்டு முன்னேற்றம் காண்பார்கள். குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் நீங்கும். பெண்களுக்கு மற்றவர்களின் பொறுப்புகளை ஏற்பதை தவிர்ப்பது நல்லது. அரசியல்வாதிகளுக்கு தொண்டர்களால் ஆதாயம் ஏற்படும். மக்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள். கலைத்துறையினருக்கு பணவரத்து இருக்கும். மாணவர்களுக்கு பாடங்களை படிப்பதில் முழுமூச்சுடன் ஈடுபடுவீர்கள். உங்களது பொருட்களின் மீது கூடுதல் கவனம் இருப்பது நல்லது.

பரிகாரம்: அஷ்டலட்சுமிகளையும் வணங்கி வர மனோதைரியம்கூடும். பணகஷ்டம்குறையும். குடும்பத்தில் சுபிட்சம்

**விருச்சிகம்** (விசாகம் 4-ம் பாதம், அனுஷம், கேட்டை):

இந்த வாரம் பொருளாதாரத்தில் நல்ல மேன்மை ஏற்படும் கடன்விவகாரங்கள் கட்டுக்குள் இருக்கும். புதிய ஆர்டர்களுக்கான முயற்சிகள் சாதகமான பலன் தரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலை சந்திக்க வேண்டி இருக்கும். குடும்பத்தில் இருப்பவர்களுடன் கோபமாக பேசுவதை தவிர்ப்பது நல்லது. தம்பதிகளுக்கிடையில் வாக்குவாதங்கள் ஏற்படலாம். அக்கம் பக்கத்தினருடன் சில்லறை சண்டைகள் ஏற்படக்கூடிய சூழ்நிலை வரலாம். பெண்கள் அடுத்தவர்களின் பிரச்சினைகளில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது. தெய்வபக்தி அதிகரிக்கும். கலைத்துறையினர் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். அரசியல்வாதிகளுக்கு வாக்கு வன்மையால் காரிய வெற்றி உண்டாகும் மாணவர்களுக்கு கல்வியை பற்றி டென்ஷன் ஏற்பட்டு நீங்கும். பாடங்களை ஒருமுறைக்கு இருமுறை படித்து புரிந்து கொள்வது நல்லது.

பரிகாரம்: மாரியம்மனை தீபம் ஏற்றி வணங்க எல்லா பிரச்சினைகளும் தீரும். குடும்பத்தில் அமைதி ஏற்படும். காரிய தடங்கல் நீங்கும்.

**மிதுனம்** (மிருகசீரிஷம் 3, 4-ம் பாதங்கள் திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3-ம் பாதம்):

இந்த வாரம் எல்லாவற்றிலும் இருந்து வந்த மனகவலை நீங்கும். வாகனத்தில் செல்லும் போது எச்சரிக்கை தேவை. திட்டமிட்டபடி காரியங்களை செய்ய முடியாமல் தடங்கல்கள் ஏற்படலாம். தொழில் வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பணவரத்து இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். குடும்பத்தில் இதமான சூழ்நிலை காணப்படும். உறவினர்கள் வருகை இருக்கும். புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும். பெண்களுக்கு திடீர் செலவு உண்டாகலாம். அரசியல்வாதிகளுக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு உயரும். கலைத்துறையினரின் படைப்புகளுக்கு மதிப்பு, மரியாதை கூடும். உங்கள் உழைப்பினை தொடர்ந்து செய்வதன் மூலம் வெற்றியை உங்கள் பக்கம் தக்க வைத்துக் கொள்ளலாம். மாணவர்களுக்கு மிகவும் கவனமாக பாடங்களை படிப்பது முன்னேற்றத்திற்கு உதவும். படிப்பின் நிமித்தம் வெளியூர் பிரயாணங்கள் ஏற்படும்.

பரிகாரம்: குலதெய்வத்தை வணங்கி வர பாவம் நீங்கும். திருமணமாகாத வர்களுக்கு திருமணம் கைகூடும்.

**தனுசு** (மூலம், பூராடம், உத்திராடம் 1-ம் பாதம்):

இந்த வாரம் நற்பெயரும் புகழும் உண்டாகும். புண்ணிய காரியங்களில் ஈடுபாடு இருக்கும். வாழ்க்கையில் எதிர்பாராத திருப்பங்களை சந்திக்க நேரலாம். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் வியாபார வளர்ச்சிக்காக துணிச்சலுடன் சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு முன்னேற வாய்ப்புகள் வந்து சேரும். சக ஊழியர்கள் மேல் அதிகாரிகளின் ஆதரவுடன் பணிகளை திறமையாக செய்து முடிப்பீர்கள். பெண்களுக்கு எந்த பிரச்சினை வந்தாலும் அதை சமாளிக்கும் திறமை உண்டாகும். கலைத்துறையினருக்கு பணிகளில் கவலைகள் இருந்தாலும் நிறைவாக முடியும். அரசியல்வாதிகளுக்கு தேவையற்ற பிரச்சினைகளில் தலையிடாமல் இருப்பதும் நல்லது. மனோதிடம் உண்டாகும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் காணப்படும். விளையாட்டு போட்டிகளில் வெற்றி வாய்ப்பு உண்டாகும்.

பரிகாரம்: தேவாரம், திருவாசகம் படித்து கடவுளை வணங்குவது நன்மையை தரும். காரியம் தடைநீங்கி நடக்கும்.

**கடகம்** (புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயில்யம்)

இந்த வாரம் மற்றவர்கள் விவகாரங்களில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது. வெளிவட்டார தொடர்புகளில் கவனம் தேவை. தொழில் வியாபாரம் சிறப்பாக நடக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வேலைபளு குறைந்து மன மகிழ்ச்சியடைவார்கள். மேல் அதிகாரிகளின் உதவியும், ஆலோசனையும் கிடைக்கும். குடும்பத்தில் இதமான சூழ்நிலை காணப்படும். உறவினர்கள் வருகை அதனால் நன்மையும் இருக்கும். கணவன், மனைவிக் கிடையில் நெருக்கம் அதிகரிக்கும். பெண்களுக்கு பயணங்களின் மூலம் நன்மை உண்டாகும். முயற்சிகள் நல்ல பலன் தரும். கலைத்துறையினர் வீண் விவாதங்களை தவிர்ப்பது நல்லது. சுபகாரியங்கள் நடத்துவது பற்றிய பேச்சு வார்த்தைகள் வெற்றி அளிக்கும். அரசியல்வாதிகள் சிக்கன நடவடிக்கை மேற்கொள்வீர்கள். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் காணப்படும். கஷ்டமாக தோன்றிய பாடங்களை எளிதாக படித்து முடிப்பீர்கள்.

பரிகாரம்: பிரத்தியங்கரா தேவியை அர்ச்சனை செய்து வணங்கிவர எல்லா கஷ்டமும் நீங்கும். எதிர்ப்புகள் அகலும்.

**மகரம்** (உத்திராடம் 2, 3, 4-ம் பாதம், திருவோணம், அவிட்டம் 1, 2-ம் பாதம்):

இந்த வாரம் உடல்நலத்தில் நல்ல முன்னேற்றம் கிடைக்கும். மற்றவர்கள் உங்களிடம் கொடுத்த எந்த வேலைகளையும் சிறப்பாக செய்து முடிப்பீர்கள். தொழில் வியாபாரம் முன்னேற்றம் காண மிகவும் கடுமையாக உழைக்க வேண்டி இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் எதிர்பார்த்தபடி பணிகள் முடியாமல் மனசங்கடத்திற்கு ஆளாக நேரிடும். குடும்பத்தில் இருப்பவர்களின் தேவைகளை பூர்த்தி செய்ய பாடுபடுவீர்கள். கணவன், மனைவிக்கிடையே வெளியில் சொல்ல முடியாத மனக்குறைகள் வரலாம். பெண்களுக்கு விருப்பம் இல்லாமல் பயணம் செல்ல நேரிடலாம். கலைத்துறையினருக்கு பணவரத்து அதிகரிக்கும். அரசியல்வாதிகளுக்கு அலைச்சல் இருக்கும். மாணவர்களுக்கு விளையாட்டில் ஆர்வம் அதிகரிக்கும். பாடங்கள் எளிமையாக தோன்றினாலும் கவனமாக படிப்பது அவசியம்.

பரிகாரம்: சனிபகவானுக்கு எள்சாதம் நைவேதியம் செய்து காகத்திற்கு வைக்க பிணிகள் நீங்கும். காரிய தடை, எதிர்ப்புகள் அகலும். உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கிடைக்கும்.

**சிம்மம்** (மகம், பூரம், உத்திரம் 1-ம் பாதம்)

இந்த வாரம் நிலுவையில் இருந்த பணம் வந்து சேரும். நீண்ட நாட்களாக வாங்க திட்டமிட்ட வாகனம் சொத்து மற்றும் வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். பயணங்கள் சாதகமான பலன் தருவதாக இருக்கும். எதிர்பாராத அதிர்ஷ்டமும் கிடைக்கலாம். உடல் ஆரோக்கியம் உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சல் வேலைபளு இருக்கும். சக ஊழியர்கள் மேல் அதிகாரிகளை அனுசரித்து செல்வது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களுடன் மகிழ்ச்சியாக பொழுதைக் கழிப்பீர்கள். கணவன், மனைவி ஒருவருக்கொருவர் அனுசரித்து போவது நன்மைதரும். பெண்கள் வீண் பேச்சை குறைப்பது நல்லது. கலைத்துறையினருக்கு கடன் விவகாரங்கள் கட்டுக்குள் இருக்கும். அரசியல்வாதிகளுக்கு எதையும் நன்கு யோசித்து பின்னர் செய்வது நன்மை தரும். மாணவர்களுக்கு அடுத்தவர்களுக்கு உதவிகள் செய்வதில் கவனம் தேவை.

பரிகாரம்: ராகு காலத்தில் சரபேஸ்வரரை வணங்க காரிய தடை நீங்கும். மன அமைதி கிடைக்கும்.

**கும்பம்** (அவிட்டம் 3, 4-ம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3-ம் பாதங்கள்):

இந்த வாரம் சாமர்த்தியமான செயல்களால் மதிப்பும், அந்தஸ்தும் உயரும். பயணத்தின்போது ஏற்பட்ட தடங்கல் நீங்கும். தொழில் வியாபாரம் லாபகரமாக நடக்கும். தன்னம்பிக்கையுடன் செயல்பட்டு முன்னேற்றம் காண்பீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பணிகளை விரைந்து முடிக்க தேவையான உதவிகள் கிடைக்கும். புதிய வேலை தொடர்பாக மேற்கொள்ளும் முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். குடும்பத்தில் இருப்பவர்கள் உங்களை அனுசரித்து செல்வார்கள். நீண்ட நாட்களாக இருந்த பிரச்சினைகள் தீரும். பெண்களுக்கு கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. கலைத்துறையினருக்கு இருந்த போட்டிகள் அகலும். அரசியல்வாதிகளுக்கு நீங்கள் செய்யும் காரியங்களுக்கு இருந்த தடை நீங்கும். மாணவர்களுக்கு கல்வியில் வெற்றி பெறுவோம் என்ற தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

பரிகாரம்: விநாயக பெருமானை தேங்காய் உடைத்து தீபம் ஏற்றி வணங்கி வர வீண் அலைச்சல் குறையும். காரிய தடை நீங்கும். கல்வி அறிவு அதிகரிக்கும்.

**கன்னி** (உத்திரம் 2, 3, 4-ம் பாதம், அஸ்தம், சித்திரை 1, 2-ம் பாதம்)

இந்த வாரம் கொடுத்த வாக்கை எப்பாடுபட்டாவது காப்பாற்றி விடுவீர்கள். விருப்பம் இல்லாத இடமாற்றம் உண்டாகலாம். தொழில் வியாபாரம் எதிர்பார்த்த அளவு லாபம் வராவிட்டாலும், சுமாராக வரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் சிறிய வேலைக்கும் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். குடும்பத்தில் இருப்பவர்களுடன் அனுசரித்து செல்வது நல்லது. பிள்ளைகள் அறிவு திறன் கண்டு ஆனந்தப்படுவீர்கள். பெண்களுக்கு எதிர்பாராத செலவுகள் உண்டாகும். கலைத்துறையினருக்கு சோம்பல் குறைந்து உற்சாகம் ஏற்படும். எதிர்பார்த்த நிதி உதவி கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு பழைய பாக்கி வசூலாகும். மேன்மை உண்டாகும். தலைமைப் பதவியில் இருப்பவர்களின் பாராட்டு கிடைக்கும். மாணவர்களுக்கு கூடுதல் மதிப்பெண் பெற மிகவும் கவனமாக படிக்க வேண்டி இருக்கும்.

பரிகாரம்: அருகிலிருக்கும் பெருமாள் ஆலயத்தில் பெருமாளை தரிசித்து வணங்க எல்லா நன்மைகளும் உண்டாகும். திருமணம் ஆகாதவர்களுக்கு விரைவில் திருமணம் கூடும்.

**மீனம்** (பூரட்டாதி 4-ம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி):

இந்த வாரம் பணவரத்து எதிர்பார்த்தபடி இருக்கும். தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் அதிகரிக்கும். வாடிக்கையாளர்களை அனுசரித்து செல்வது நல்லது. பழைய பாக்கிகளை வசூல் செய்வதில் வேகம் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கடுமையாக உழைக்க வேண்டி இருக்கும். குடும்பத்தில் இருப்பவர்களால் டென்ஷன் உண்டாகலாம். கணவன், மனைவிக்கிடையில் கருத்து வேற்றுமை வராமல் இருக்க மனம்விட்டு பேசுவது நல்லது. பெண்கள் எடுத்த காரியத்தை செய்து முடிக்க அலைய வேண்டி இருக்கும். கலைத்துறையினருக்கு வீண் குழப்பம், காரிய தடை ஏற்பட்டு நீங்கும். அரசியல்வாதிகளுக்கு கவன தடுமாற்றம் உண்டாகலாம். பணவரத்து தாமதப்படும். எதிர்பார்த்தபடி ஒப்பந்தங்கள் கிடைப்பது தாமதமாகலாம். மாணவர்கள் கல்வியில் வெற்றி பெற கடுமையாக உழைக்க வேண்டி இருக்கும். சிக்கன நடவடிக்கை கைகொடுக்கும்.

பரிகாரம்: திருப்புகழ் பாடி முருகனை வணங்கிவர எல்லா நன்மைகளும் உண்டாகும். தேவையான நேரத்தில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.



நெல்லை மாவட்டம் கங்கைகொண்டான் சிப்காட்டில் அமைக்கப்பட்டுள்ள டாடா பவர் சோலார் நிறுவனத்தில் உற்பத்தியை நேற்று தொடங்கி வைத்த முதல்வர் ஸ்டாலின், தொழிற்சாலையை பார்வையிட்டார். உடன் அமைச்சர்கள், டாடா பவர் சோலார் நிறுவன அதிகாரிகள் உள்ளனர்.

# அவசரநிலை காலத்தில் பேச்சுரிமையை காங்கிரஸ் கட்சி நசுக்கியது!

## பிரதமர் நரேந்திர மோடி குற்றச்சாட்டு!!

புதுடெல்லி, பிப். 7


அவசரநிலை காலத்தில் காங்கிரஸ் கட்சி பேச்சுரிமையை நசுக்கியது என்று பிரதமர் நரேந்திர மோடி குற்றம் சாட்டினார்.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடர் நடைபெற்று வருகிறது. இதில், கடந்த சில தினங்களாக மாநிலங்களவையில் குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீது விவாதம் நடைபெற்றது. இந்த விவாதத்துக்கு பதில் அளித்து பிரதமர் மோடி நேற்று பேசியதாவது: குடியரசுத் தலைவரின் உரை நமக்கு உத்வேகம் அளிப்பதாகவும் பயனுள்ளதாகவும் இருந்தது. அத்துடன் நாம் அனைவரும் முன்னோக்கி செல்வதற்கான வழியையும் காட்டியது. இது தொடர்பாக ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தங்கள் கருத்துகளை தெரிவித்தனர்.

'நம் அனைவருடைய வளர்ச்சிக்காக நாம் அனைவரும் இணைந்து செயல்படுவோம்' என்பதுதான் இந்த அரசின் குறிக்கோள். எனவேதான், நாம் இந்த இடத்தில் இருப்பதற்கான வாய்ப்பை நாட்டு மக்கள் வழங்கி உள்ளனர். குடும்பம்தான் முதல் என்பது காங்கிரஸ் கட்சியின் மாதிரி. அக்கட்சிக்கு 'நம் அனைவருடைய வளர்ச்சிக்காக நாம் அனைவரும் இணைந்து செயல்படுவோம்' என்ற முழக்கத்தில் நம்பிக்கை இல்லை. இது அவர்களின் சிந்தனைக்கு அப்பாற்பட்டது. இதை அவர்களிடம் எதிர்பார்ப்பது தவறு.

நாட்டு மக்கள் நமது வளர்ச்சி மாதிரியை பரிசோதித்து, புரிந்துகொண்டு ஆதரித்துள்ளனர். தேசத்துக்கே முன்னுரிமை என்பது நமது வளர்ச்சிக்கான மாதிரி ஆகும். காங்கிரஸ் ஆட்சியின் போது, அனைத்து தரப்பினரையும் சமாதானப்படுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இதுதான் அவர்களுடைய அரசியல் மாதிரி. கடந்த 2014ல் பாஜக ஆட்சிக்கு வந்த பிறகு அனைவரையும் திருப்திபடுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் அரசு செயல்பட்டு வருகிறது.

எனது தலைமையிலான மத்திய அரசு, விளிம்புநிலை மக்க



ளுக்கு, பெண்கள் மற்றும் திருநங்கைகள் மேம்பாட்டுக்காக செயல்பட்டு வருகிறது. காங்கிரஸ் கட்சி சமூகத்தில் சாதி எனும் விஷத்தை பரப்புகிறது. ஒரு காலத்தில் அம்பேத்கருக்கு எதிராக காங்கிரஸ் கட்சி வெறுப்பை பரப்பியது. அவருக்கு எதிராக சதி செய்தது. அவருக்கு பாரத ரத்னா விருது கொடுப்பது பற்றிகூட பரிசீலிக்கவில்லை. ஆனால், இப்போது 'ஜெய் பீம்' என்று முழங்க வேண்டிய நிலைக்கு அக்கட்சி தள்ளப்பட்டுள்ளது.

அரசியல் சாசனத்துக்கு காங்கிரஸ் கட்சி ஒருபோதும் மரியாதை கொடுக்கவில்லை. ஆனால் இன்று நமது அரசியலமைப்பு சட்டத்தை உருவாக்கியவர்களுக்கு மரியாதை கொடுத்து, அவர்களிடமிருந்து உத்வேகம் பெற்று நாம் முன்னேறி வருகிறோம். காங்கிரஸ் கட்சி அதிகாரத்துக்காக அவசரநிலையை பிரகடனம் செய்தது. இதை நாடே அறியும். அவசரநிலை அமலில் இருந்தபோது, அரசியல் சாசனம் எப்படி அவமதிக்கப்பட்டது, பேச்சுரிமை எப்படி நசுக்கப்பட்டது என்பதைப் பார்த்தோம்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

### தமிழக அரசு நிறைவேற்றி அனுப்பிய

# மசோதாக்களை ஆளுநர் 3 ஆண்டுகளாக நிறுத்தி வைக்க காரணம் என்ன?

## தமிழக ஆளுநருக்கு உச்சநீதிமன்றம் கேள்வி!

புதுடெல்லி, பிப். 7

தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றி அனுப்பிய மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் நிறுத்தி வைத்த காரணம் என்ன என்பது குறித்து ஆதாரப்பூர்வமாக விளக்கம் அளிக்குமாறு மத்திய அரசின் அட்டார்னி ஜெனரலுக்கு உச்சநீதிமன்ற நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.

சட்டப்பேரவையில் நிறைவேற்றி அனுப்பிய பல்வேறு மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் கிடப்பில் போட்டுள்ள ஆளுநர் ஆர்.என். ரவிக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு வழக்கு தொடர்ந்துள்ளது. உச்ச நீதிமன்றநீதிபதிகள் ஜே.பி.பர்திவாலா, ஆர். மகாதேவன் அமர்வில் இந்த வழக்குகள் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தன.

அப்போது நடந்த வாதம் வருமாறு:–

தமிழக அரசு தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர்கள் முகுல் ரோஹ்தகி, ராகேஷ் திவேதி, பி.வில்சன், அபிஷேக் சிங்வி: ஆளுநர் தனக்கு அனுப்பிய மசோதாக்களின் தன்மையை ஆராயாமல் ஒரு வித வெறுப்புஉணர்வுடன் செயல்படுகிறார். குடியரசுத் தலைவருக்கு பரிந்துரை செய்வதானாலும், அதுபற்றி தமிழக அரசுடன் ஆலோசித்திருக்க வேண்டும். அவ்வாறு செய்யவில்லை. சட்டப்பேரவையில் மசோதாக்கள் குறித்து அரசு எடுத்த முடிவின்மீது ஆளுநர் எந்த முடிவும் எடுக்காமல் கிடப்பில் போட முடியாது.

தனது சொந்த விருப்பத்தையும் அதில் புகுத்த முடியாது. ஒரு மசோதாவை திருப்பி அனுப்பினால் அதற்கான காரணத்தை விளக்க வேண்டும். அவரது செயல்பாட்டால் துணைவேந்தர்களை நியமிக்க முடியவில்லை. மாநில அரசின் அதிகாரத்தில் தேவையின்றி குறுக்கிட்டு மத்திய அரசின் ஏஜெண்ட்போல செயல்படுகிறார். அரசியலமைப்பு சட்டம், உச்சநீதிமன்ற உத்தரவுகள், மாநில அமைச்சரவையின் முடிவுகள் ஆகியவற்றை மதிப்பதில்லை.

அட்டார்னி ஜெனரல் ஆர்.வெங்கடரமணி

ஆளுநரின் செயல்பாடுகள் கூடுதலாக சித்தரிக்கப்பட்டுள்ளது. மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் நிறுத்தி மட்டுமே வைத்தார். மறுபரிசீலனை செய்யுமாறு திருப்பி அனுப்பவில்லை.

இவ்வாறு வாதம் நடந்தது. இதையடுத்து நீதிபதிகள் கூறியதாவது:

ஆளுநரின் பதவி, அதிகாரத்தை நாங்கள் குறைத்து மதிப்பிடவில்லை. அதே நேரம் மசோதாக்களை கிடப்பில் போட்டுள்ள அவரது செயல்பாடு குறித்து மட்டுமே விசாரிக்கிறோம். தமிழக அரசு நிறைவேற்றி அனுப்பிய 14 மசோதாக்களில் இரண்டை மட்டும் குடியரசுத் தலைவருக்கு பரிந்துரை செய்தது ஏன்? மற்ற 12 மசோதாக்களை 3 ஆண்டுகளாக ஆளுநர் ஆய்வு செய்கிறாரா? மசோதாக்கள் மறு ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டால் கிடப்பில் போட்டு மவுனம் காப்பது ஏன்? குடியரசுத் தலைவர் அதில் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும்?

ஆளுநரின் உண்மையான செயல்பாடு என்ன என்பது சட்டப்பேரவைக்கு எப்படி தெரியவரும்? அரசு செய்யும் விஷயங்கள் பிடிக்கவில்லை என்றால் அது ஆளுநரின் சொந்த கருத்துதானே? மசோதாக்கள் மீது முடிவு எடுக்காமல் ஆண்டுக்கணக்கில் நிறுத்திவைக்க அரசியலமைப்பு சட்டத்தில் வழிவகை உள்ளதா? மசோதாக்களை ஆளுநர் கடந்த 3 ஆண்டுகளாக ஏன் நிறுத்தி வைத்தார் என்பதை ஆதாரப்பூர்வமாக விளக்க வேண்டும். இவ்வாறு மத்திய அரசின் அட்டார்னி ஜெனரலுக்கு உத்தரவிட்ட நீதிபதிகள், விசாரணையை இன்றைக்கு தள்ளி வைத்தனர்.


### ஆந்திர அமைச்சர்களின் ரேங்க்:

# 6-வது இடத்தில் சந்திரபாபு நாயுடு!

அமராவதி, பிப். 7

அமராவதியில் நேற்று ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு தலைமையில் அமைச்சரவை கூட்டம் நடைபெற்றது. இதில் மின்கட்டணத்தை அதிகரிக்க கூடாது, தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தையும் ஒவ்வொன்றாக விரைவில் நிறைவேற்ற வேண்டும், அரசு ஆசிரியர் பணி இடங்கள் உட்பட 7.5 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பை உருவாக்கும் தேர்தல் வாக்குறுதியை படிப்படியாக நிறைவேற்ற வேண்டும் என அமைச்சரவை கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

துறை ரீதியாக அனைத்து அமைச்சர்களும் தங்களின் பணிகளை விரைவாக அதே சமயத்தில் சாமர்த்தியமாக செய்து முடிக்க வேண்டும் என்றும், மக்களிடம் சென்று அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை தீர்க்க உடனடியாக முடிவெடுக்க வேண்டும்



என்றும் வலியுறுத்தப்பட்டது. மதிய உணவு திட்டம் தங்களின் பிள்ளைகளுக்கு வழங்கும் உணவு போல் இருத்தல் அவசியம், உயர்தர அரிசியையே இலவச மதிய உணவு திட்டத்திற்கு உபயோகப்படுத்த வேண்டும் என சந்திரபாபு நாயுடு வலியுறுத்தினார்.

இதற்கிடையே கடந்த 9 மாதங்களாக சிறப்பாக பணியாற்றிய அமைச்சர்களின் பட்டியலையும் அவரே வெளியிட்டார். அதன்படி, முதல் இடத்தில் எஸ்எம்டி பரூக் இடம்பெற்றார்.

6ம் இடத்தில் முதல்வர் சந்திரபாபு நாயுடுவும், 8ம் இடத்தில் அவரது மகன் லோகேஷும், 10ம் இடத்தில் துணை முதல்வர் பவன் கல்யாணும், சுபாஷ் கடைசி இடத்திலும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆட்சியை பிடிக்கப்போவது யார்?
# டெல்லியில் நாளை வாக்கு எண்ணிக்கை!
## நண்பகலுக்குள் முடிவு தெரிந்து விடும்!!

புதுடெல்லி,பிப்.7–
டெல்லியில் நாளை காலை 8 மணிக்கு வாக்கு எண்ணிக்கை தொடங்குகிறது. ஆட்சியை பிடிக்கப்போவது பா.ஜ.க.வா அல்லது ஆம்ஆத்மியா என்பது நண்பகலுக்குள் தெரிந்து விடும்.

டெல்லியில் 70 சட்ட சபை தொகுதிகள் உள்ளன. இங்கு முதல்முயாக 1993–ல் தேர்தல் நடைபெற்றது. பா.ஜ.க. ஆட்சியைப் பிடித்தது. 1998, 2003, 2008 ஆகிய 3 தேர்தல்களிலும் காங்கிரஸ் வெற்றி பெற்றது. 2013–ல் நடைபெற்ற தேர்தலில் தொங்கு சட்டசபை அமைந்தது. ஆம்ஆத்மி கட்சியும் காங்கிரசும் கூட்டு சேர்ந்து ஆட்சி அமைத்தன. ஆனால் இந்த கூட்டணி ஆட்சி அற்ப ஆயுளில் முடிந்து விட்டது. 2015–ல் நடைபெற்ற தேர்தலில் ஆம்ஆத்மி கட்சி 67 இடங்களிலும், பா.ஜ.க. 3 இடங்களிலும் வெற்றி பெற்றன. 2020–ல் நடைபெற்ற தேர்தலில் ஆம்ஆத்மி 62 தொகுதிகளிலும், பா.ஜ.க. 8 தொகுதிகளிலும் வெற்றி பெற்றன.

இந்தியாவில் உள்ள எந்த மாநிலத்துக்கும், யூனியன் பிரதேசத்துக்கும் இல்லாத தனிச்சிறப்பு டெல்லிக்கு உள்ளது. பெண் முதல்வர்கள் அரிதிலும் அரிது என்பதுதான் இன்று வரை அரசியல் அரங்கில் காணப்படும் நிலையாகும். டெல்லியில் இதுவரை மதன்லால் குரானா, சாஹிப்சிங் வர்மா, சுஷ்மாசுவராஜ், ஷீலா தீட்சித், அரவிந்த் கேஜ்ரிவால், அதிஷி என 6 முதல்வர்கள் பதவி வகித்துள்ளனர். இந்த 6 பேரில் சுஷ்மாசுவராஜ், ஷீலா தீட்சித், அதிஷி ஆகிய மூவரும் பெண்கள் ஆவர். முதல்வர் பதவியில் பாலின சமத்துவத்தை நிலைநாட்டியுள்ள டெல்லி, இந்தியாவுக்கே முன்னுதாரணமாக விளங்குகிறது. அதுமட்டுமல்லாமல் 3 பெண் முதல்வர்களும் பா.ஜ.க., காங்கிரஸ், ஆம்ஆத்மி என வெவ்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர் என்பதும் கவனத்தில் கொள்ளத்தக்க அம்சமாகும்.

2020–ஆம் ஆண்டு தேர்தலைப் போலவே 2025–ஆம் ஆண்டு தேர்தலிலும் மேற்கண்ட 3 கட்சிகளுக்கு இடையே மும்முனை போட்டி ஏற்பட்டது. கடந்த ஒரு மாதகாலமாக அந்த கட்சிகள் தீவிர பிரசாரம் மேற்கொண்டன.

இதனைத் தொடர்ந்து நேற்று முன் தினம் வாக்குப்பதிவு நடந்தது. மொத்தம் 60.42 சதவீத வாக்குகள் பதிவாகின. இந்த தேர்தலில் பதிவான வாக்குகள் நாளை எண்ணப்படுகின்றன. நாளை காலை 8 மணிக்கு வாக்கு எண்ணிக்கை தொடங்குகிறது. முதலில் தபால் வாக்குகள் எண்ணப்பட்டு அதன்பிறகு வாக்குப்பதிவு இயந்திரங்களில் பதிவான வாக்குகள் எண்ணப்பட உள்ளன.

நண்பகல் 12 மணிக்குள் வெற்றி முன்னணி நிலவரம் ஏறத்தாழ உறுதி செய்யப்படும் என எதிபார்க்கப்படுகிறது. வாக்குப்பதிவை முன்னிட்டு கட்டுப்பாட்டு மையங்களில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

டெல்லியில் ஆட்சி அமைக்க குறைந்தபட்சம் 36 தொகுதிகளில் வெற்றி பெற வேண்டும். ஏறத்தாழ அனைத்து கருத்துக்கணிப்புகளும் பாரதிய ஜனதா சுமார் 50 தொகுதிகளில் வெற்றி பெறும் நிலையில் இருப்பதாக தெரிவித்துள்ளன. கருத்துக்கணிப்புகளின்படி டெல்லியில் 27 ஆண்டுகளுக்குப் பிறகு பா.ஜ.க மீண்டும் ஆட்சியை பிடிக்குமா? அல்லது கருத்துக்கணிப்புகளை பொய்யாக்கி ஆம் ஆத்மியே மீண்டும் வெற்றியை ருசிக்குமா? என்பது நாளை நண்பகல் அளவில் தெரிந்துவிடும்.

இந்தியாவில் கருத்துக்கணிப்புகள் பலிப்பதும் உண்டு, பலிக்காமல் போவதும் உண்டு. ஜார்க்கண்டில், ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு பிரகாசமாக உள்ளது என பல கருத்துக்கணிப்புகள் தெரிவித்தன. இதை தேர்தல் முடிவு உறுதிப்படுத்தியது. ஆனால் அரியானாவில் காங்கிரஸ் ஆட்சியைப் பிடிக்கும் என பெரும்பாலான கருத்துக்கணிப்புகள் தெரிவித்தன. இந்தகணிப்புகளைபொய்யாக்கி விட்டு, அரியானாவில் பா.ஜ.க. தொடர்ந்து 3–ஆவது முறையாக வாகை சூடியது என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பின்னணியில் நாளை டெல்லியில் தாமரை மலருமா அல்லது துடைப்பம் உயர்ந்தோங்குமா என்ற கேள்வி அரசியல் அரங்கை உலுக்கி வருகிறது.



சேலம் மாநகராட்சி மைய அலுவலகத்தில் கொத்தடிமை தொழிலாளர் முறை எதிர்ப்பு தின உறுதிமொழியினை மேயர் ராமச்சந்திரன் தலைமையில் எடுத்துக்கொள்ளப்பட்டது. உடன் துணை ஆணையாளர் பாலசுப்பிரமணியம், மண்டலக்குழு தலைவர் உமாராணி மற்றும் அனைத்து அலுவலர்கள் உள்ளனர்.

### ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் கைதான
# வழக்கறிஞர் ஹரிஹரன் ஜாமின் மனுவை திரும்பப்பெற அனுமதி!
## வழக்கை தள்ளுபடி செய்து ஐகோர்ட்டு உத்தரவு!!

சென்னை, பிப். 7–
ஆம்ஸ்ட்ராங் கொலைக்கு பயன்படுத்த வைத்திருந்த வெடிகுண்டுகளை நீதிமன்றத்தில் வைத்து மாற்றியதாக கைது செய்யப்பட்ட வழக்கறிஞர் ஹரிஹரனின் ஜாமீன் மனுவை திரும்ப பெற அனுமதித்து வழக்கை தள்ளுபடி செய்து சென்னை உயர்நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

பழைய வண்ணாரப்பேட்டையை சேர்ந்த வழக்கறிஞர் ஹரிஹரன், பகுஜன்சமாஜ் கட்சி தலைவர் ஆம்ஸ்ட்ராங்கை படுகொலை செய்ய பயன்படுத்துவதாக இருந்த வெடி குண்டுகளை சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் (அம்பேத்கர் சிலை அருகே) வைத்து மற்ற குற்றவாளிகளுக்கு மாற்றி கொடுத்ததாக காவல்துறையால் 17வது குற்றவாளியாக கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட ஹரிஹரன் 112 நாட்களுக்கு மேல் சிறையில் இருப்பதால் ஜாமீன் வழங்கக்கோரி எழும்பூர் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். மனுவை விசாரித்த எழும்பூர் நீதிமன்றம் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்படவில்லை என்பதாக கூறி ஜாமின் மனு தள்ளுபடி செய்தது. இந்நிலையில், ஜாமின் தள்ளுபடி செய்யப்பட்ட பின்பு வழக்கில் கூடுதல் குற்றப்பத்திரிக்கை காவல் துறை தாக்கல் செய்தது.

அதனால், நிலுவையில் விசாரணை இருந்த போது ஜாமின் மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதால், எழும்பூர் நீதிமன்ற உத்தரவை ரத்து செய்து தனக்கு ஜாமின்வழங்க வேண்டும் என வழக்கறிஞர் ஹரிஹரன்சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இந்த மனு நீதிபதி பி.வேல்முருகன் முன்பு விசாரணைக்கு வந்தபோது, குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுவிட்டதால் ஜாமின் மனுவை திரும்ப பெற அனுமதிக்க வேண்டும் என தெரிவித்தார்.

அதை ஏற்றுக்கொண்ட நீதிபதி, மனுவை திரும்ப பெற அனுமதித்து வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

### மாணவிகளிடம் பாலியல் தொல்லை:
# போக்சோ தடுப்புச்சட்டத்தின் கீழ் 5 பேர் மீது வழக்கு பதிவு!
## திருச்சி மத்திய மண்டல ஐ.ஜி. தகவல்!!

மணப்பாறை, பிப்.7
திருச்சி மத்திய மண்டல காவல்துறை தலைவர் ஜோசி நிர்மல்குமார் தெரிவித்ததாவது:
தனியார் பள்ளி ஆசிரியர்களிடம் தனியார் பள்ளிகளுக்கான கல்வி அலுவலர் பேபி ஒவ்வொருவரிடம் தனியாக மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு மைய அலகின் அலுவலர் ராகுல்காந்தி முன்னிலையில் விசாரணை நடைபெற்று வருகிறது. இதன் பிறகு பள்ளி குழந்தைகளிடம் விசாரணை நடத்தப்படும்.வசந்தகுமார் ,சுதா மாராட்ச்சி, இளஞ்செழியன், ஜெயலட்சுமி உள்ளிட்ட ஐந்து பேர் மீதும் போக்சோ தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது இவ்வாறு மத்திய மண்டல காவல்துறை தலைவர் ஜோசி நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.

# பள்ளி நிர்வாகிகள்...

1–ம் பக்கத் தொடர்ச்சி

பரபரப்பு ஏற்படவே போலீசார் வந்து பேச்சு வார்த்தை நடத்தினர்.

இருப்பினும் உடனடியாக வழக்கு பதிவு செய்து சம்மந்தப்பட்ட பள்ளியின் தாளாளர், நிர்வாகிகள், முதல்வர் உள்ளிட்ட அனைத்து நபர்களையும் கைது செய்து நடவடிக்கை எடுத்திட வலியுறுத்தி நொச்சிமேடு என்ற இடத்தில் திருச்சி – திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் சாலை மறியலில் ஈடுபட்டனர். இதையடுத்து டிஐஜி வருண்குமார், திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர், செல்வநாக ரெத்தினம் தலைமையிலான போலீசார் மறியலில் ஈடுபட்டவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக கூறியதை அடுத்து நள்ளிரவில் மக்கள் மறியலை கைவிட்டு கலைந்து சென்றனர்.

இந்த சம்பவத்தால் மணப்பாறையில் நேற்று நள்ளிரவு வரை பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இந்த சம்பவம் குறித்து த திருச்சி எஸ்.பி. செல்வநாகரெத்தினம் நிருபர்களிடம் கூறும் பொழுது 5மாணவி பாலியல் சீண்டல் வழக்கு சம்மந்தமாக 4 பேர் கைது செய்யப்பட்டள்ளனர், மேலும் ஒருவர் கைது செய்திடும் பணி நடைபெற்று வருகிறது கூறினார்.

இதே போல் பள்ளியில் இதுபோன்ற மாணவிகளுக்கு ஏற்படும் பாலியல் சீண்டல்கள் நடைபெறாமல் தடுத்திட அனைத்து பள்ளிகளிலும் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும், மேலும் இது ஒரு சம்பவம்தான் நடைபெற்றுள்ளதாக வேறு ஏதேனும் குற்றட்சாட்டுகள்உள்ளதா என விசாரணையில் தெரியவரும் என்றார்.

மேலும் தற்போது மாணவி பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்பட்டது தொடர்பாக சிசிடிவி காட்சிகளைஆய்வுசெய்து வருகிறோம். இந்நிலையில் பள்ளி சிறுமி பாலியல் துன்புறுத்தல் செய்யப்பட்ட விவகாரத்தில் நள்ளிரவு வரை சிறுமியின் உறவினர்களும், பொது மக்களும் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்ட சமாபவத்தால் பரபரப்பு ஏற்பட்டது. இதனால் திருச்சி திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் சுமார் 2 மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

இந்நிலையில் பள்ளியின் தலைமை ஆசிரியர் ஜெயலட்சுமி உடல் நலக்குறைவு காரணமாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று இன்று காலை மணப்பாறை காவல் நிலையத்தில் வந்து சரணடைந்தார்.

**நாமக்கல் குடும்ப நல நீதிமன்றத்தார் சமூகம்**
**M.C.NO: 24/2024**
நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வட்டம், எஸ்.பி.புதூர், குட்டைதெரு. க.எண்.16பில் வசித்து தற்சமயம் நாமக்கல் மாவட்டம் மற்றும் வட்டம், கொண்டிசெட்டிபட்டி, கொங்குநகர்3, கதவு எண்:2/31Lல் வசிக்கும் நல்லப்பன் மகளும் கிருஷ்ணமூர்த்தி மனைவியுமான சுமார் 35 வயது யூகரசி 1 மேற்படி விலாசத்தில் இருக்கும் மேற்படியாரின் மைனர் மக்கள் சுமார் 11 வயதுள்ள மைனர் தன்வந்த் அஜய்2 சுமார் 7 வயது மைனர் ஹரிஸ்ரோஷன்3 (2,3 மைனர் மனுதாரர்கள் பை அடுத்த சினேகிதி தாயார் 1ம் மனுதாரர் யூகரசி)
...மனுதாரர்கள்
-எதிராக -
நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வட்டம், மோகனூர் மெயின் ரோடு, இந்திரா நகர்,
கதவு எண்:ஏ1ல் வசிக்கும் இளவரசி
...2ம் எதிர்மனுதாரர்
**2ம் எதிர்மனுதாரருக்கு தெரிவிப்பதாவது.**
மனுதாரர்கள் தங்களது பெயரிலும் 1ம் எதிர்மனுதாரர் கிருஷ்ணமூர்த்தி பெயரிலும் ஜீவனாம்சம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதில் மேற்படி வழக்கில் நீர் ஆஜராக வருகின்ற 10.02.2025 தேதியில் வாய்தா போடப்பட்டுள்ளது. அதுசமயம் தாங்கள் அன்று காலை 10.30 மணிக்கு சமூகம் கோர்ட்டில் ஆஜராகி தங்கள் கட்சியை தெரிவித்துக்கொள்ளலாம். தவறினால் மனு ஒரு தலைபட்சமாக உத்தரவு செய்யப்படும் என்பதை இதன்மூலம் அறியவும்.
**அ.சுகுணா** எம்.ஏ.பி.எல்.,
வழக்கறிஞர்,
நாமக்கல்



மாத ஊதியம் ரூ.50 ஆயிரம் வழங்கக்கோரி அவிநாசி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கௌரவ விரிவுரையாளர்கள் வகுப்பை புறக்கணித்து, உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

### பாரபட்சம் காட்டுவதாக புகார்:
# தேர்தல் ஆணையத்துக்கு எதிராக சமாஜ்வாடி எம்.பி.க்கள் போராட்டம்!

புதுடெல்லி, பிப்.7–
நேற்று முன்தினம் டெல்லி சட்டசபைக்கு தேர்தல் நடத்தப்பட்டது. இதே நாளில் தமிழ்நாட்டில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதியிலும், உத்தரபிரதேசத்தில் மில்கிபூர் சட்டமன்ற தொகுதியிலும் இடைத் தேர்தல் நடத்தப்பட்டது.

மில்கிபூர் தொகுதியில் சமாஜ்வாடி கட்சிக்கும் பா.ஜ.க.வுக்கும்இடையே கடும் போட்டி நிலவியது. தேர்தல் ஆணையம் பாரபட்சமாக செயல்படுகிறது. பா.ஜ.க.வுக்கு அனுசரணையாக செயல்படுகிறது என சமாஜ்வா டி தலைவர் அகிலேஷ் யாதவ் குற்றம்சா ட்டியு ள்ளார்.

நாடாளுமன்றத்தில் சமாஜ்வாடி எம்.பி.க்கள் போராட்டம் நடத்தினர். வெள்ளைத் துணியை விரித்தபடி அவர்கள் நடத்திய போராட்டம் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. வெள்ளைத்துணியை சடலத்தின் மீதுதான் போர்த்துவார்கள். தேர்தல் ஆணையத்தை இழிவுபடுத்திய சமாஜ்வாடி எம்.பி.க்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பா.ஜ.க. எம்.பி.க்கள் வற்புறுத்தியுள்ளனர்.

# மசோதா விவகாரத்தில் ஆளுநர்...

1–ம் பக்கத் தொடர்ச்சி

விவகாரத்தில் கவர்னர் முட்டுக்கட்டையாக இருக்க முடியாது என கூறினர்.

கவர்னர் தரப்பு: பல்கலைக்கழக செயல்பாடு குறித்து ஆளுநர் தலைமையில் துணைவேந்தர்கள் மாநாடு நடைபெற இருந்தது. அதில்கலந்துகொள்ள வேண்டாம் என்று சில துணைவேந்தர்களை அரசு அணுகியது. யு.ஜி.சி விதிகளின் கீழ் கட்டுப்பட்டு உள்ள துணைவேந்தர்கள் பொறுப்பை ஆக்கிரமிக்க மாநில அரசு முயற்சித்தது. அரசியல் காரணங்களுக்காகவே துணைவேந்தர் மசோதாவை மாநில அரசு கொண்டு வந்தது.

காரசார விவாதம் தொடர்ந்தது. கவர்னர் சில முரணான காரணங்களுக்காக ஒப்புதல் வழங்காமல் இருப்பார் என்றால், அரசு மற்றும் கவர்னர் என இரு தரப்பும் இணைந்து முடிவெடுக்க ஜனாதிபதிக்கு அனுப்பலாம். குறிப்பாக, இதன் மீது முடிவெடுக்க ஜனாதிபதிக்கு அனுப்புங்கள் என்று மாநில அரசே கவர்னரை கேட்க வைக்கலாம். எனவே இதில் எதுவும் மாநில உரிமையை பறிப்பதாக கருத முடியாது. கவர்னர் அரசியலமைப்பு பிரிவு 200ல் விதி 1ன் கீழ் முடிவெடுத்தே ஆகவேண்டும் என்று கூறுவது, பிரிவு 200ஐ முரணாக திரித்து கூறுவதாக ஆகும் என்று வாதத்தின் போது சுட்டிக் காட்டப்பட்டது.

அப்போது குறுக்கிட்ட நீதிபதிகள், கடந்த 2023–ஆம் ஆண்டு மசோதாக்கள் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட பின்னர், தற்போது வரை என்ன நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டுள்ளார்?. 2 ஆண்டுகளாக மசோதாக்கள் அவரிடம் உள்ளதா? மாநில அரசுக்கும் அவருக்கும் இடையே தகவல் பரிமாற்றம் இருந்ததா?.

அட்டர்னி ஜெனரல்: இல்லை, மசோதாக்கள் அனுப்பப்பட்ட 2 மாதங்களில் தனது முடிவை தெரிவித்து விட்டார். அதில் 7 மசோதாக்கள்மீதான ஒப்புதலை நிறுத்தி வைப்பதாக தெரிவித்துள்ளார்.

நீதிபதிகள்: ஜனாதிபதியும் ஒப்புதலை நிறுத்தி வைக்கிறாரா? ஜனாதிபதி மசோதா மீது முடிவெடுக்காமல் நிறுத்தி வைத்தால்அடுத்துஎன்ன? முடிவெடுக்காத நிலையில் அது அப்படியே கிடப்பில் உள்ளதா?

கவர்னர் தரப்பு: ஒப்புதல் இல்லாமல் ஜனாதிபதியிடம் உள்ளதென்றால், அவர் அதற்கு மேல் எவரிடமும் கேட்க வேண்டியது இல்லை.

நீதிபதிகள்: அப்படியெனில் அந்த மசோதா கிடப்பிலேயே இருக்குமா?

கவர்னர் தரப்பு: கவர்னரின் பணிகள் என்பது அரசியலமைப்பின் அடிப்படையான கூட்டாட்சி தத்துவத்தின் ஒரு அங்கம் ஆகும். மேலும் கவர்னருக்குஅனுப்பியஅனைத்து மசோதாக்களும் புதிய சட்டங்கள் அல்ல, மாறாக அவை சட்ட திருத்தங்கள். அதனை ஜனாதிபதி முடிவுக்காக கவர்னர் நிறுத்தி வைக்கிறார். நீதிபதிகள்: பல்கலைக்கழகங்களின் தரம், துணைவேந்தர்கள் தேர்வு குறித்து கவலை கொண்டு அந்த மசோதாக்களை நிறுத்தி வைத்தால், அடுத்து என்ன?

மசோதாக்கள் தொடர்பான விவகாரத்தில் தமிழக ஆளுநரின் நிலைப்பாட்டை உச்சநீதிமன்றம் சாடியுள்ளது திருப்புமுனையை ஏற்படுத்தியுள்ளது. இவ்விவகாரம் தமிழ் நாட்டுக்கு அப்பாலும் அதிர்வலைகளை எழுப்பியுள்ளது.

### விழுப்புரம் மாவட்டத்தில்
# கல் உடைக்கும் ஆலைக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு தள்ளுபடி!
## சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு!!

சென்னை, பிப்.7
விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள வன்னூர் தாலுகாவிற்குட்பட்ட தெற்குனம், கொந்தமூர் ஆகிய கிராமங்களில் கல் உடைக்கும் ஆலையை தனியார் நிறுவனம் நடத்தி வருகிறது.

இந்த கல் உடைக்கும் ஆலைகளால் விவசாயம் பாதிக்கப்படுவதாகவும், வீடுகளில் சுவர் கீறல் விழுவதாகவும், சுற்றுச்சூழல் முற்றிலும் மாசடைந்திருப்பதாக விழுப்புரத்தை சேர்ந்த கண்ணபிரான் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

அதில், கல் உடைக்கும் ஆலையை சுற்றி சுற்றுச்சுவர் இல்லை, ஆலை நிர்வாகம் எந்த வித அனுமதியும் பெறாமல் வெடிகுண்டுகளை வைத்து கற்களை உடைப்பதால் கடுமையான ஒலி மாசுவும், சுற்றுச்சூழல் மாசுவும் ஏற்படுவதாக மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திற்கு மனு அளித்து எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என மனுவில் குறிப்பி ட்டிருந்தார்.

இந்த வழக்கு தலைமை நீதிபதி ஸ்ரீராம், செந்தில்குமார் ராமமூர்த்தி அமர்வில் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டது.

அப்போது, மாசுக்கட்டு வாரிய தரப்பில், இது தொடர்பாக பதில் மனு தாக்கல் செய்ய கால அவகாசம் வேண்டும் என கோரிக்கை வைக்கப்பட்டது.தனியார் கல் உடைக்கும் ஆலை தரப்பில், வழக்கறிஞர் விஜய் பிரசாத் ஆஜராகி, ஆலையை செயல்படவிடாமல் தடுப்பதற்காக இந்த வழக்கு உள்நோக்கத்துடன் தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

இதேபோல் இதற்கு முன்னதாக ஆலையை செயல்படவிடாமல் தடுக்க ஒரே வழக்கறிஞரால் தாக்கல் செய்யப்பட்ட 2 வழக்குகளை தள்ளுபடிசெய்யப்பட்டிருப்பதாக சுட்டிக் காட்டினார்.

இந்த வாதங்களை கேட்டதலைமை நீதிபதி அமர்வு, இது தொடர்பாக மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் முடிவெடுக்க உத்தரவிட்டு வழக்கு மனுவை தள்ளுபடி செய்தது.

**மாண்பமை சார்பு நீதிமன்ற சமூகம், நாமக்கல்.**
**வ.இ.ம.எண்:1/2021**
**M.C.NO:91/2021**
நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வட்டம், ராமபுரம் புதூர் அஞ்சல், ராமபுரம் புதூர், கதவு எண்.26,மெயின் ரோட்டில் வசிக்கும் V.சீரங்கன் மகன் S.குணசேகரன்.
...மனுதாரர்/வாதி
-எதிர்-
நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வட்டம், வீசானம் அஞ்சல், ராசாகவுண்டனூர் கிராமம், கதவு எண்: 3/90 ல் வசிக்கும் பாலசந்தர் மனைவி B.நந்தா
...எதிர்மனுதாரர்/பிரதிவாதி
**எதிர்மனுதாரர் பிரதிவாதிக்கு சம்மன்**
மேற்படி நெம்பர் தாவாவில் மனுதாரர்/ வாதி எதிர்மனுதாரர்/பிரதிவாதிபேரில்தாவாபடிதொகைகிடைக்க வேண்டி தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனுவில் எதிர்மனுதாரர்/பிரதிவாதி ஆகிய நீர் சமூகம் கோர்ட்டில் ஆஜராக 01.03.2025-ல் வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி தேதியில் காலை 10.30 மணிக்கு எதிர்மனுதாரர்/பிரதிவாதி ஆகிய நீர் சமூகம் கோர்ட்டில் ஆஜராகி உமது ஆட்சேபனையை தெரிவிக்க வேண்டியது என்றும் தவறினால் மேற்படி தாவா ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்படும்.
(கோர்ட்டார் உத்திரவுப்படி)
**S. VINOTH,** B.Sc. B.L..
Advocate & Notory

# கரும்பு தோட்டத்தில் தீ விபத்து!

கோபி, பிப்.7–
கோபி அருகே உள்ள காசிபாளையம் கிருஷ்ணா நகரை சேர்ந்தவர் வாசுதேவன் (57). விவசாயி. இவருக்கு சொந்தமான தோட்டம் அந்த பகுதியில் உள்ளது. இங்கு அவர் ஏக்கர் பரப்பளவில் கரும்பு பயிரிட்டுள்ளார்.

இந்த நிலையில் நேற்று மாலையில் திடீரென கரும்பு தோட் டத்தில் இருந்து புகை வந்தது. சிறிது நேரத்தில் தீப்பிடித்து எரிய தொடங்கியது. இதைபார்த்த அக்கம் பக்கத்தினர். இது குறித்து கோபி தீயணைப்பு நிலையத்துக்கு தகவல் கொடுத்த னர். அதன்பேரில் தீயணைப்பு வீரர்கள் அங்கு சென்று தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்ட னர். சுமார் ஒரு மணி நேர போராட்டத்துக்கு பிறகு தீ அணைக் கப்பட்டது. தீ விபத்துக்கான காரணம் தெரியவில்லை.இது குறித்து கடத்தூர் போலீசார் விசாரணை செய்து வருகின்றனர்.

# சென்னையில் ரூ.75 லட்சம் பறிமுதல்!
## உரிய ஆவணங்கள் இன்றி எடுத்துச் செல்லப்பட்டது!!

சென்னை,பிப்.7
சென்னையில் உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு சென்ற ரூ.75 லட்சம் பணத்தை போலீசார் பறிமுதல் செய்தனர்.

சென்னை எம்.கே.பி. நகர் 7–வது குறுக்கு தெருவில் வழக்கம்போல் போலீசார் நேற்று இரவு ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது சந்தேகத்திற்குரிய வகையில் நின்று கொண்டிருந்த ஒரு காரை சோதனையிட்ட போது, காரில் கட்டுக்கட்டாக மொத்தம் 75 லட்சம் ரூபாய் பணம் இருந்தது. பணத்திற்கான உரிய ஆவணங்கள் இல்லை.

இதனையடுத்து காரில் இருந்தவர்களிடம் விசாரித்த போது, ஆந்திர மாநிலம் நெல்லூர் மாவட்டத்தைச் சேர்ந்த லோகேஷ் (28), விக்கி (32) என தெரிய வந்தது.

இருவரையும் எம்.கே.பி நகர் காவல் நிலையம் அழைத்து வந்து போலீசார் விசாரித்ததில், பிரபல தனியார் நிறுவனத்தின் அடுக்கு மாடி குடியிருப்பில் வீடு வாங்க பணம் எடுத்து வந்ததாககூறியுள்ளனர். பிறகு முன்னுக்குப் பின் முரணாக பதில் அளித்துள்ளனர்.

தொடர்ந்து, ரூ.75 லட்சம் பணத்தையும், அதை கொண்டு வந்த இருவரையும் வருமான வரித்துறை அதிகாரிகளிடம் போலீசார் ஒப்படைத்தனர்.


# TANEJA AEROSPACE AND AVIATION LIMITED

Regd. Office: Belagondapalli Village, Thally Road, Denkanikottai Taluk, Krishnagiri Dist., Belagondapalli - 635114, Tamil Nadu, India Phone : 04347-233508, Fax : 04347-233414, E-mail : secretarial@taal.co.in, Website : www.taal.co.in, CIN : L62200TZ1988PLC014460

**EXTRACT OF THE STATEMENT OF CONSOLIDATED FINANCIAL RESULTS FOR THE QUARTER AND NINE MONTHS ENDED DECEMBER 31, 2024** (Rs. LAKH)

| Sr. No. | Particulars | Three Months Ended December 31, 2024 | Nine Months Ended December 31, 2024 | Three Months Ended December 31, 2023 |
|---|---|---|---|---|
| 1 | Revenue from Oprations | 897.36 | 2,823.62 | 745.41 |
| 2 | Profit before exceptional items and tax | 540.78 | 1,559.86 | 330.50 |
| 3 | Profit before tax | 540.78 | 1,559.86 | 330.50 |
| 4 | Profit after tax | 439.53 | 1,195.31 | 250.15 |
| 5 | Total comprehensive income for the period | 439.53 | 1,195.31 | 250.15 |
| 6 | Paid up equity share capital (Face Value Rs. 5 per share) | 1,275.03 | 1,275.03 | 1,246.54 |
| 7 | Total reserve including (Non-controlling interest) | 12,707.10 | 12,707.10 | 9,574.03 |
| 8 | Earnings / (Loss) per share (of Rs. 5/- each) (not annualised): (a) Basic earnings / (loss) per share (INR) | 1.72 | 4.69 | 1.00 |
| | (b) Diluted earnings / (loss) per share (INR) | 1.72 | 4.69 | 1.00 |

**EXTRACT OF THE UN-AUDITED STANDALONE INTERIM FINANCIAL RESULTS FOR THE QUARTER AND NINE MONTHS ENDED DECEMBER 31,2024** (Rs. LAKH)

| Particulars | Three Months Ended December 31, 2024 | Nine Months Ended December 31, 2024 | Three Months Ended December 31, 2023 |
|---|---|---|---|
| Revenue from Operations | 897.36 | 2,823.62 | 745.41 |
| Profit before exceptional item and tax | 540.79 | 1,559.86 | 330.50 |
| Profit before tax | 540.79 | 1,559.86 | 330.50 |
| Profit after tax | 439.54 | 1,195.31 | 250.15 |
| Total comprehensive income for the period | 439.54 | 1,195.31 | 250.15 |

Notes : 1. The un-audited consolidated financial result and un-audited standalone financial results have been reviewed by the Audit Committee and approved by the Board of Directors at its meeting held on February 05, 2025. 2. The Board of Directors at its meeting held on February 05,2025, has declared an interim dividend of ₹ 1.50/- per equity share 3. The above is an extract of the detailed format of financial results filed with stock exchange under Regulation 33 of the Securities and Exchange Board of India ( Listing Obligations and Disclosure Requirement) Regulation, 2015. The full format for three months and nine months ended December 31,2024 is available on the company website (www.taal.co.in). The same can be accessed by scanning the QR code provided below.

Place: Pune
Date : February 05, 2025

**For and on behalf of the Board of Director**
**Rakesh Duda**
**Managing Director**

# டயர் தொழிற்சாலை ஊழியரிடம் ரூ.21.29 லட்சம் ஆன்லைன் மோசடி!

## வடமாநில கும்பலை சேர்ந்த பெண் கைது!!

சேலம் பிப் .7

சேலம் மாவட்டம் பெத்த நாயக்கன்பாளையம் பகுதியை சேர்ந்தவர்பூபதி (28), பெங்களூருவில் உள்ள தனியார் டயர் தொழிற்சாலையில்ஊழியராகவேலை பார்த்து வருகிறார். இவரது செல்போனுக்கு கடந்த ஆண்டு மார்ச் மாதம், பகுதி நேர வேலைக்கு தொடர்பு கொள்ளவும் என ஒரு மெசேஜ் வந்துள்ளது. அதனை பார்த்து, குறிப்பிட்ட எண்ணை தொடர்பு கொண்டு பூபதி பேசியுள்ளார். எதிர்முனையில் பேசிய நபர், விமான டிக்கெட் புக்கிங் செய்து கொடுக்கும் பகுதிநேர வேலை பார்த்தால், கமிஷன் தருவதாக கூறி சேர்த்துள்ள னர். பிறகு ஒரு இணையதளத்தில் பணம் முதலீடு செய்தால்,அதிக லாபம் சம்பாதிக்கலாம் எனக்கூறி பூபதியிடம் இருந்து பண முதலீடு செய்ய வைத்துள்ளனர். ஆரம்பத்தில் குறைந்த தொகை முதலீடு செய்த நிலையில், கமிஷன் தொகையை அதே இணையதளத்தில் வைத்துள்ளனர். அதனை நம்பி, லட்சக்கணக்கில் பணத்தை முதலீடு செய்துள்ளார். அதற்கு வந்த கமிஷன் தொகையை பூபதியால் எடுக்கமுடியவில்லை. ஒட்டுமொத்தமாக ரூபாய் 21.29 லட்சம் செலுத்திய நிலையில், மறுமுனையில் பேசிய நபர்கள், பூபதியின் இணைப்பை எடுப்பதை தவிர்த்துள்ளனர். அப் போது தான், ஏமாற்றப்பட்டதை உணர்ந்த அவர், சேலம் மாவட்ட சைபர் கிரைம் போலீசில் புகார் செய்தார். இன்ஸ்பெக்டர் ஹேமாவதி தலைமையிலான போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்தனர். அதில், இந்த ஆன்லைன் மோசடியில் ஒடிசா, பீகார், ராஜஸ்தான் மாநிலத்தை சேர்ந்த கும்பல், தமிழகத்தை சேர்ந்த சிலருடன் சேர்ந்து ஈடுபட்டிருப்பது தெரியவந்தது. இதனையடுத்து போலீசார் தீவிர விசாரணை நடத்தி, பூபதியிடம் பணத்தை சுருட்டிய கும்பலை சேர்ந்த காரைக்குடியை சேர்ந்த ராஜாபருக் (27) என்பவரை கடந்த டிசம்பர் மாதம் கைது செய்து, சிறையில் அடைத்தனர். தொடர்ந்து இம்மோசடியில் தொடர்புள்ள திருவள்ளூர் மாவட்டம் வளரவாக்கத்தை சேர்ந்த மதுசந்திரன்மனைவிகாயத்ரி (54) என்பவரை தேடி வந்தனர். அவரை நேற்று முன் தினம் சேலம் சைபர் கிரைம் போலீசார் கைது செய்தனர். பி.பி.ஏ., பி.காம்., எம்ஏ படித்துள்ள காயத்திரி, ஆன்லைன் டிரேடிங் தொழிலில் ஈடுபட்டு வந்துள்ளார். அப்போது வடமாநில மோசடி கும்பல் மூலம், இவரும் ஆன்லைனில் பண மோசடியில் ஈடுபட்டுள்ளார். அந்த வகையில் பூபதியிடம் பணம் பறித்த கும்பலில் காயத்திரியும் இருந்துள்ளார் எனத்தெரியவந்தது. இதையடுத்து கைதான காயத்திரியை சேலம் கோர்ட்டில் ஆஜர்படுத்தி, பெண்கள் கிளைச் சிறையில் அடைத்தனர். இவ்வழக்கில் ஒடிசா, பீகார், ராஜஸ்தான் மாநிலத்தை சேர்ந்த கும்பலை கைது செய்ய போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சேலம் ரவுடி மாயம்!

சேலம்,பிப்.7

சேலம் சின்னக்கடை வீதியை சேர்ந்தவர் ஆனந்தராஜ் (45) ரவுடி. இவரது மனைவி சுஷ்மா (39). இவர் கோட்டை மாரியம்மன் கோயில் அருகே பேன்சி ஸ்டோர் வைத்துள்ளார். ஆனந்தராஜிற்கு மதுஅருந்தும் பழக்கம் உள்ளது. கடந்த 2ம் தேதி ஆனந்தராஜ் திடீரென மாயமானார். சுஷ்மா அவரை பல்வேறு இடங்களில் தேடியும் கிடைக்க வில்லை. அவரது செல்போனையும் வீட்டில் வைத்து விட்டு சென்றிருப்பது தெரிந்தது. ஆனந்தராஜ் கடைசியாக அவரது அண்ணனிடம்தான் பேசிக்கொண்டிருந்தார் என வும், அதன்பின்னர் தான் அவரை காணவில்லை எனவும் சுஷ்மா டவுன் காவல்நிலையத்தில் புகார் அளித்தார். அதன்பேரில் இன்ஸ்பெக்டர் சந்திரகலா மற்றும் போலீசார் விசாரணை நடத்தினர். இதற்கிடையில், உத்தரபிரதேச மாநிலத்தில் நடந்து வரும் கும்பமேளாவில் கலந்து கொள்வதற்காக சென்றிருப்பதாகவும் இதனால் தன்னை தேட வேண்டாம் என வும் மனைவியிடம் வேறொரு நம்பரில் இருந்து ஆனந்தராஜ் பேசியுள்ளார். தொடர்ந்து போலீசார் விசாரித்தபோது, சம்பவத்தன்று மனைவி சுஷ்மாவிடம் மது அருந்த ஆனந்த ராஜ் பணம் கேட்டுள்ளார். அவர் கொடுக்க மறுத்ததால் கணவன்மனைவியிடையே தகராறு ஏற்பட்டுள்ளது. இதையடுத்து ரயிலில் டிக்கெட் எடுக்காமல் பயணித்து கும்பமேளாவுக்கு ஆனந்தராஜ் சென்றிருப்பது போலீசாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது. தொடர்ந்து இதுபற்றி போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தாதகாப்பட்டி மாரியம்மன் கோயில் தை திருவிழா!

சேலம் பிப்.7

சேலம் தாதகாப்பட்டியில் பிரசித்தி பெற்ற மாரியம்மன், காளியம்மன் கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலில் தை திருவிழா கடந்த 21ம் தேதி பூச்சாட்டுதலுடன் தொடங்கியது. தொடர்ந்து ஒவ்வொரு நாளும் சுவாமிக்கு பால், தயிர், குங்குமம், பன்னீர் உள்ளிட்ட பொருட்களால் சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றது. கடந்த 5ம் தேதி சக்தி அழைப்பு, அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம், புஷ்ப அலங்காரம்,

சந்தனக்காப்பு அலங்காரம் நடந்தது. தொடர்ந்து கோயில் வளாகத்தில் நூற்றுக்கணக்கான பெண்கள் கலந்து கொண்டு பொங்கலிட்டு வழிபட்டனர்.



அதனைத் தொடர்ந்து அலகு குத்தியும், உருள தண்டம் போட்டு பக்தர்கள் தங்களுடைய நேர்த்தி கடன்களை செலுத்தினர். விழாவின் முக்கிய நிகழ்வாக நேற்றிரவு வண்டிவேடிக்கை நிகழ்ச்சி நடந்தது. கோயில் வளாகத்தில் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட வண்டிகளில் கடவுள்களைப்போல் வேடம் அணிந்து முக்கிய வீதிகள் வழியாக ஊர்வலமாக வந்தனர்.

இந்த நிகழ்ச்சியில் மாமன்ற உறுப்பினர் தனலட்சுமி சதீஷ்குமார் உட்பட தாதாகப்பட்டி சுற்று வட்டார பகுதியைச் சேர்ந்த பொது மக்கள் ஏராளமான கலந்து கொண்டனர்.

### நல்லம்பள்ளியில்

# மருத்துவ கழிவுகள் எரிப்பதால் சுகாதார சீர்கேடு!

நல்லம்பள்ளி,பிப்7

தர்மபுரி மாவட்டம் நல்லம்பள்ளி ஒன்றியத்தில் பல்வேறு இடங்களில் போலி மருத்துவர்கள் செயல்பட்டு வருகின்றனர். இவர்கள் முறையாக அனுமதி இல்லாமல் மருத்துவம் பார்க்கும் பொழுது வெளியேற்றப்படும் மருத்துவ கழிவுகளை வனப்பகுதி, ஆட்கள் நடமாட்டம் இல்லாத பகுதிகளில் கொட்டி வருவது வழக்கம். தற்பொழுது சர்வ சாதாரணமாக போலி மருத்துவர்கள் மருத்துவம் பார்ப்பதோடு மருத்துவ கழிவுகளை குடியிருப்பு பகுதிகளிலே வீசி வருகின்றன. அதனைத் தொடர்ந்து நல்லம்பள்ளி அரசு மேல் நிலைப்பள்ளி அருகாமையில் கொட்டப்பட்டுள்ள குப்பை கழிவுகளை சந்தர்ப்பமாக பயன்படுத்திக் கொண்டு போலி மருத்துவர்கள் மருத்துவக் கழிவுகளை கொட்டி இரவு நேரங்களில் தீ வைத்து விட்டு செல்கின்றனர். இதனால் பகல் முழுவதும் எரிவதோடு புகை அதிக அளவில் பள்ளி வளாகத்திற்குள் செல்வதால் மாணவர்களுக்கு நோய் தொற்று பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.



நல்லம்பள்ளி அரசு பள்ளி அருகில் மருத்துவர்கள் மருத்துவக் கழிவுகளை கொட்டி எரிப்பதால் பள்ளி மாணவர்களுக்கு,பொதுமக்களுக்கும் நோய் தொற்று பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.



கிருஷ்ணகிரி நகராட்சி அலுவலகத்தில் ரகசிய கேமரா அலுவலர்கள் மீது சந்தேகம் என கலெக்டர், எஸ்பி.யிடம் திமுக நகர செயலாளர் நவாப் புகார் கூறி மனு கொடுத்தார்

# சினிமா ஆசைக்காட்டி சிறுவர்களுக்கு பாலியல் தொல்லை கொடுத்தேன்!

## கைதான 'லப்பர் பந்து' பட நடிகர் பரபரப்பு வாக்கு மூலம்!!

சென்னை, பிப்.7

சென்னையில் சிறுவர்களுக்கு சினிமா ஆசைக்காட்டி பாலியல் தொல்லை கொடுத்ததாக 'லப்பர் பந்து' பட நடிகர் பரபரப்பு வாக்குமூலம் அளித்துள்ளார்.



சென்னையை சேர்ந்த 16 வயது சிறுவனின் பெற்றோர் விருகம்பாக்கம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பரபரப்பு புகார் ஒன்றை அளித்துள்ளானர். அதில்," விருகம்பாக்கத்தில் உள்ள ஒரு பூங்காவிற்கு தனது 16 வயது சிறுவன் சென்றதாகவும், அங்கே இருந்த இளைஞர் ஒருவர் தனது மகனிடம் பேச்சு கொடுத்து அவரை லவ் செய்வதாகக்கூறி தவறாக நடக்கக்கூறியதாகவும் இதனால் அதிர்ச்சி அடைந்த தனது மகன் அழுதுகொண்டே வந்து தன்னிடம் தெரிவித்ததால் புகார் அளித்ததாக தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பாக விருகம்பாக்கம் அனைத்து மகளிர் போலீசார் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். அங்குள்ள சிசிடிவி காட்சிகளை ஆய்வு மேற்கொண்டதில் மதுரவாயல் பகுதியை சேர்ந்த ஹரி என்ற 21 வயது இளைஞரை போலீசார் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டுள்ள ஹரி பிரபல தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பாகும் பல தொடர்களில் ஜூனியர் ஆர்டிஸ்ட் ஆக பணியாற்றுவதும், "லப்பர் பந்து" படத்தில் நடித்ததும் விசாரணையில் தெரியவந்துள்ளது. குறிப்பாக பூங்காவிற்கு வரக்கூடிய சிறுவர்களைஹரி குறி வைத்து அவர்களிடம் பேச்சு கொடுத்து தான் டிவி பிரபலம் எனக்கூறி, நீ அழகாய் இருக்கியாய் என்னை போலவே பிரபலமாவாய் எனப்பேசி உன்னை லவ் செய்கிறேன் டா தம்பி எனக்கூறி அவர்களை வற்புறுத்தி தனது இச்சையை தீர்த்து கொண்டுள்ளார்.

மேலும் பாலியல் தொல்லை கொடுப்பதை வாடிக்கையாக வைத்திருந்துள்ளார்.

இதே போல தன்னுடன் நடிக்க வரும் பல துணைநடிகைகளோடு உல்லாசமாக இருந்துள்ளார்.

தன்னால் ஆசையை அடக்கமுடியாத நேரத்தில் சிறுவர்களிடம் இது போன்று நடந்துகொண்டேன்.

சீரியலில் பெரிய ஆளாக வரவேண்டும் என நினைத்த நிலையில் அடக்க முடியாத ஆசையால் அசிங்கப்பட்டு நிற்பதாக அழுதுகொண்டே வாக்கு மூலம் அளித்துள்ளார். அவரது செல்போனில் ஆபாச வீடியோக்கள் உள்ளதா ? என ஆய்வு செய்ய சைபர் ஆய்வகத்திற்கு அனுப்பியுள்ளதாகவும் போலீசார் தெரிவித்துள்ளனர். பெண் பிள்ளைகள் மட்டுமின்றி ஆண் குழந்தைகளும் தனக்கு நடப்பவற்றை வீட்டில் பெற்றோர்களிடம் தெரிவிக்கவேண்டும்.

இதுபோன்ற நபர்களால் அவர்களும் தவறான பாதைக்கு சென்று தங்களது எதிர்காலத்தை இழக்க நேரிடும் எனவும் பெற்றோர்கவனிக்க வேண்டும் எனவும் போலீசார் அறிவுறித்தியுள்ளனர் ஹரி



எம்.தாதம்பட்டி அரசு உயர்நிலை பள்ளி மாணவி ச.நந்தியா கன்னியாகுமாரியில் நடைபெற்ற சப் ஜீனியர் பிரிவில் குழு ஆயுத வீச்சு போட்டியில் வெற்றி பெற்று இரட்டை தங்கம் வென்றார். இவருக்கு பள்ளி தலைமை ஆசிரியர் ஏ.கோபால் ஆசிரியர்கள் முருகன் சையத்பாஷா முருகேசன் ஜி.முருகன் வேடியம்மாள் இரசியா வரதராஜன் உடற்கல்வி ஆசிரியர் சண்முகம் முனுசாமி பிடிஏ தலைவர் சங்கீதா எஸ்எம்சி தலைவர் சென்னம்மாள் சிலம்பம் பயிற்சியாளர் சுரேஷ்குமார் ஆகியோர் பாராட்டி வாழ்த்து தெரிவித்தனர்.

### கிருஷ்ணகிரியில்

# தொடர்ந்து சாலையோர ஆக்கிரமிப்புகள் அகற்றம்!

கிருஷ்ணகிரி,பிப்.7

கிருஷ்ணகிரி நகராட்சிக் குட்பட்ட ஐந்து ரோடு ரவுண்டானா, சென்னை சாலை,பழையசப்&ஜெயில் சாலை, காந்தி சாலை உள்ளிட்ட பகுதிகளிலும், நெடுஞ்சாலை பகுதிகளிலும் ஆக்கிரமிப்புகள் அதிகரித்துள்ளதால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதாக பல்வேறு புகார்கள் சென்றன.

இதையடுத்து கடந்த மாதம் 31ம் தேதி கிருஷ்ணகிரி நகராட்சிக்குட்பட்ட ஐந்துரோடு ரவுண்டானாவில் ஆக்கிரமிப்புகள் அகற்றும் பணியை நகராட்சி மற்றும் நெடுஞ்சாலைத்துறை ஊழியர்கள் இணைந்து துவக்கினர்.

ஏழாவது நாளாக சென்னை சாலை, சேலம் சாலை உள்ளிட்ட பகுதிகளில் சாலையோரகடைகள், ஆக்கிரமிப்பு படிக்கட்டுகள், கழிவுநீர் கால்வாய்கள் உள்ளிட்டவற்றை அகற்றினர். மேலும், கழிவுநீர் கால்வாய் உள்ள பகுதிகளின் மேலே போடப்பட்டிருக்கும் கற்களும் அகற்றப்பட்டு வருகின்றன. ஆக்கிரமிப்புகள் அகற்றத்திற்கு பின் கழிவுநீர் கால்வாய்கள் தூர்வாரப்பட்ட பின் புனரமைக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த பணியின் போது நெடுஞ்சாலைத்துறை உதவி பொறியாளர் அன்பரசு, சாலை ஆய்வாளர்கள் ரமேஷ்,மாதவராஜ்,புனிதா, ராமமூர்த்தி மற்றும் நகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

# சிலம்பம் போட்டியில் அரூர் அரசு பள்ளி மாணவர்கள் சாதனை!

அரூர்,பிப்.7

அகில இந்திய முதலாவது ஓபன் நேஷனல் சிலம்பம் சாம்பியன் போட்டி கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெற்றது இப்போட்டி ஜனவரி 30 முதல் பிப்ரவரி 2 வரை நான்கு நாட்களாக நடைபெற்றது

மகாராஷ்டிரா சத்தீஸ்கர் இமாச்சலப்பிரதேசம் ஜம்முகாஷ்மீர் ஆந்திரா டெல்லி ஹரியானா ஆகிய மாநிலங்களில் இருந்து 500க்கும் மேற்பட்ட வீராங்கனைகள் பங்கேற்றனர்

இதில் தர்மபுரி மாவட்டத்தின் மாஸ்டர் சுரேஷ்குமார் தலைமையில் 50 மாணவ மாணவிகள் பங்கேற்றனர்

இதில் ப்ரீசப் ஜீனியர் சப் ஜீனியர் சீனியர்உமன் ஆகிய பிரிவின் கீழ் போட்டிகளில் கலந்து கொண்டு 26 தங்கம் 7 வெள்ளி 11வெண்கலம்

ஆகிய பதக்கங்கள் பெற்றனர்இதையடுத்துமாணவ மாணவிகளை உலகசிலம்பம் மற்றும் அடிமுறை



டெக்னிக்கல் டைரக்டர் பி.செல்வராஜ் வாழ்த்து தெரித்தார் வெற்றி பெற்ற மாணவ மாணவிகள் மார்ச் மாதம் இலங்கையில் நடைபெறும் ஆசிய அளவிலான போட்டிகளில் கலந்து கொள்ள தகுதி பெற்றுள்ளனர் தகுதி பெற்ற மாணவ மாணவிகளை உலக சிலம்ப சமயலனம் நிறுவனர் மாநில தேசிய சிலம்ப நடுவர் சுரேஷ்குமார் மற்றும் பயிற்சியாளர் சிவசக்தி உடன் இருந்தனர் வெற்றி பெற்று ஊர் திரும்பிய அரூர் பகுதி மாணவர்களுக்கு ஆசிரியர்கள் பெற்றோர்கள் பொதுமக்கள் என அனைத்து தரப்பினரும் இனிப்புகள் வழங்கி சால்வை அணிவித்து வரவேற்பு அளித்தனர்.

### பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த

# 5 ஆண்டுகளுக்குப் பிறகு வட்டி 0.25 சதவீதம் குறைப்பு!

## ரிசர்வ் வங்கி கவர்னர் அறிவிப்பு!!

மும்பை, பிப்.7

பணவீக்கத்தை கட்டுப்படுத்தவும் பொருளாதார ஸ்திரத் தன்மையை செம்மைப்படுத்தவும், ரிசர்வ் வங்கி முன்னெடுப்பை மேற்கொண்டுள்ளது. 5 ஆண்டுகளுக்குப் பிறகு ரெப்போ வட்டி, 6.50 சதவீதத்தில் இருந்து 6.25 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. இதுபற்றிய அதிகாரப்பூர்வ அறிவிப்பை ரிசர்வ் வங்கி கவர்னர் சஞ்சய் மல்கோத்ரா வெளியிட்டுள்ளார்.

ரெப்போ விகிதம் என்பது வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கி வழங்கும் குறுகிய கால கடனுக்கு விதிக்கப்படும் வட்டி விகிதமாகும். இரு மாதங்களுக்கு ஒரு முறை ரிசர்வ் வங்கியின் நிதிக் கொள்கைக் குழு கூடி, ரெப்போ விகிதம் தொடர்பாக முடிவுகள் எடுப்பது வழக்கம். அந்த வகையில் ஆர்பிஐ நிதி கொள்கைக் குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை ரிசர்வ் வங்கி கவர்னர் சஞ்சய் மல்கோத்ரா இன்று வெளியிட்டு இருக்கிறார்.

இதன்படி 6.50 சதவீதத்தில் இருந்து ரெப்போ விகிதம் 6.25 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. இதற்கு முன் 2020–ஆம் ஆண்டு மே மாதம் ரெப்போ விகிதம் குறைக்கப்பட்டது என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.

ரெப்போ ரேட் குறைவால், வங்கிகளில் வாங்கிய வீடு, வாகன கடன்களுக்கான வட்டி குறைய வாய்ப்புள்ளது. இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி அடுத்த நிதி ஆண்டில் 6.7 சதவிகிதமாக இருக்கும் எனவும் ரிசர்வ் வங்கி கணித்துள்ளது. பொதுவாக ரெப்போ விகிதம் உயரும்போது வீடு மற்றும் வாகனக் கடன்களுக்கான வட்டி விகிதம் அதிகரிக்கும். அதேபோல குறையும் போது, வட்டி விகிதமும் குறையும். நீண்ட காலத்திற்கு பிறகு வங்கிகளுக்கான வட்டி விகிதத்தை ரிசர்வ் வங்கி குறைத்து இருப்பது, மக்களுக்கு மகிழ்ச்சியை அளிப்பதாக அமைந்து ள்ளது. ரெப்போ வட்டி குறைக்கப்ப ட்டுள்ளதால் பணவீக்கம் ஓரளவு குறைய வாய்ப்புள்ளது என்று பொருளியல் வல்லுநர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். மேலும் இது பொருளாதார ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்த அனுசரனையாக இருக்கும் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

### மாணவி பலாத்கார சம்பவம்:

# கிருஷ்ணகிரியில் அ.தி.மு.க.வினர் நாளை கண்டன ஆர்ப்பாட்டம்

## அசோக்குமார் எம்.எல்.ஏ. அறிக்கை!!

கிருஷ்ணகிரி,பிப்.7

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட அ.தி.மு.க. செயலாளர் அசோக்குமார் எம்.எல்.ஏ. வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அருகே அரசுப்பள்ளியில் 3 ஆசிரியர்கள் சேர்ந்து அப்பள்ளியில் 8ம் வகுப்பு படித்து வரும் 13 வயது மாணவியை கூட்டு பாலியல் பலாத்காரம் செய்துள்ளனர். இந்த வன்கொடுமை சம்பவத்தை கண்டித்து, கிருஷ்ணகிரி கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட அ.தி.மு.க., சார்பில், கிருஷ்ணகிரி புதிய பஸ் நிலையம் அருகில் உள்ள அண்ணாசிலை எதிரில், நாளை (சனிக்கிழமை) காலை 10 மணிக்கு கண்டன ஆர்ப்பாட்டம் நடக்கிறது. இதை அ.தி.மு.க., துணை பொதுச் செயலாளர் கே.பி. முனுசாமி எம்.எல்.ஏ. தலைமை தாங்கி தொடங்கி வைத்து கண்டன உரையாற்றுகிறார். மாவட்ட செயலாளர்கள் அசோக்குமார் எம்.எல்.ஏ. (கிருஷ்ணகிரி கிழக்கு), பாலகிருஷ்ணரெட்டி (கிருஷ்ணகிரி மேற்கு) முன்னிலை வகிக்கிறார்கள்.

எனவே கட்சியின் இன்னாள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டுமாறு கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தருமபுரி – மொரப்பூர் புதிய ரயில் திட்டம் நிறைவேற்ற வேண்டும்!

## மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்!!

தர்மபுரி, பிப். 7

தர்மபுரி மாவட்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் மாவட்டக்குழு கூட்டம் கட்சி அலுவலகத்தில் நடந்தது. மாவட்ட செயற்குழு உறுப்பினர் மாரிமுத்து தலைமை தாங்கினார். மாநில செயற்குழு உறுப்பினர் ரவீந்திரன் பங்கேற்றார். மாவட்ட செயலாளர்சிசுபாலன்அறிக்கை சமர்ப்பித்தார்.

மாநிலக்குழு உறுப்பினர் குமார், மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் நாகராசன், முத்து, அர்சுனன், விஸ்வநாதன், மல்லிகா, தனுசன், சக்திவேல் உள்ளிட்ட மாவட்டக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிதி நிலை அறிக்கையில் உணவு, உரம், எரிவாயு மானியம் குறைக்கப்பட்டுள்ளது. கார்ப்பரேட் வரி குறைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு, கேரளா போன்ற எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்கள் வஞ்சிக்கப்பட்டுள்ளன. தர்மபுரி மொரப்பூர் ரயில் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற நீண்ட நாள் கோரிக்கை நிறைவேற்றப்பட

வில்லை. இத்திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டும். தர்மபுரி நகராட்சியிலும், டவுன் பஞ்சாயத்துகளிலும் இணைப்பதற்கு முன் அருகில் உள்ள பஞ்சாயத்து மக்களின் கருத்தறிந்து செயல்பட வேண்டும். கட்சியின் அகில இந்திய மாநாட்டையொட்டி வருகிற மார்ச் 12 ஆம் தேதி தர்மபுரியில் சிறப்புக் கருத்தரங்கம் நடைபெறவுள்ளது. இக்கருத்தரங்கில் கட்சியின் மத்தியக்குழு உறுப்பினர்கள் விஜு கிருஷ்ணன், வாசுகி ஆகியோர் பங்கேற்கின்றனர். தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



Published by S.N.Selvam on behalf of M/s. Chennai Murasu Pvt. Ltd. from Salem Malai Murasu Achagam, K-1, SIDCO Industrial Estate, Omalur Main Road, 5 Roads, Salem- 636004, Tamil Nadu and printed by P.Senthil Azhagan at Salem Malai Murasu Achagam, K-1, SIDCO Industrial Estate, Omalur Main Road, 5 Roads, Salem-636 004, Tamil Nadu. Editor:S.N.Selvam.

### 2023–24 நிதியாண்டில்

# ரூ.1.86 லட்சம் கோடி வருமான வரி செலுத்திய ரிலையன்ஸ் நிறுவனம்!

## உலகளவில் 48-ஆவது இடத்தில் உள்ளது!!

புதுடெல்லி, பிப்.7–

2023–24 நிதியாண்டில் ரிலையன்ஸ் நிறுவனம் ரூ.1.86 லட்சம் கோடியை கார்ப்பரேட் வருமான வரியாக செலுத்தியுள்ளது. இந்நிறுவனம் உலகளவில் 48–ஆவது இடத்திற்கு உயர்ந்துள்ளது பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இந்திய தொழில் அதிபர்களான கவுதம் அதானியும், முகேஷ் அம்பானியும் பொருளாதார சாம்ராஜ்ஜியத்தை ஆண்டுக்கு ஆண்டு விரிவுபடுத்தி வருகின்றனர். ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநரான இந்திய கோடீஸ்வரர் முகேஷ் அம்பானி, 2023–24 நிதியாண்டிற்கான கார்ப்பரேட் வருமான வரியாக ரூ. 1.86 லட்சம் கோடி செலுத்தி, இந்தியாவில் அதிக வரி செலுத்தும் நிறுவனங்களின் உச்சத்தில் ரிலையன்ஸை நிலைநிறுத்துவதற்கான அளவுகோலை இன்னும் அதிகமாக அமைத்துள்ளார். ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் அதன் கூட்டு வருவாயில் முதல்முறையாக ரூ.10 லட்சம் கோடியைத் தாண்டியதன் மூலம் வலுவான வளர்ச்சியை அடைந்துள்ளது.

இந்த நிறுவனத்தின் மிக சமீபத்திய ஆண்டு அறிக்கையின்படி, 2023 – 24 நிதியாண்டில் ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேட் வருமான வரி செலுத்துதல் அதன் முந்தைய ஆண்டு பங்களிப்பான ரூ. 1.77 லட்சம் கோடியை விட ரூ. 9,000 கோடியை தாண்டியுள்ளது. இது இந்தியாவின் முன்னணி வரி செலுத்தும் நிறுவனமாக நிறுவனத்தின் நிலையை வலுப்படுத்தி உள்ளது. ஆனால் இது நிறுவனத்தின் ஆண்டு அறிக்கையில் பிரதிபலிக்கும் ஒரே சாதனையல்ல, ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் மற்றொரு குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டியது, ரூ. 20 லட்சம் கோடி சந்தை மூலதன வரம்பை தாண்டிய முதல் இந்திய நிறுவனமாக, ஆண்டுக்கு 27 சதவீதம் அதிகரித்து, உலகளவில் மிகப்பெரிய நிறுவனங்களில் 48–ஆவது இடத்திற்கு உயர்ந்துள்ளது பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

வருடாந்திர அறிக்கையில், இந்தியாவின் வளர்ச்சியின் ஒரு பகுதியாக இருப்பதில் பெருமிதம் கொள்வதாக அம்பானி பூரிப்புடன் குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர், "நிச்சயமற்ற உலகில் ஸ்திரத்தன்மை மற்றும் வளர்ச்சியின் கலங்கரை விளக்கமாக இந்தியா உருவானது 1.4 பில்லியன் இந்தியர்களின் கூட்டு முயற்சிகளுக்கு சான்றாகும். இந்தியாவின் மனப்பான்மை, ரிலையன்ஸை தொடர்ந்து புதுமைகளை உருவாக்கவும், அதன் அனைத்து நிறுவனங்களிலும் சிறந்து விளங்கவும் தூண்டுகிறது. இந்தியாவின் வளர்ச்சியில் ஒரு பகுதியாக இருப்பது மற்றும் அதன் அசாதாரண முன்னேற்றத்திற்கு பங்களிப்பது ரிலையன்ஸ் குடும்பத்திற்கு மிகப்பெரிய பெருமையாகும்" என்று தெரிவித்துள்ளார்.



சேலம் புறநகர் மாவட்ட எம்ஜிஆர் இளைஞர் அணி மாவட்ட செயலாளராக நியமனம் செய்யப்பட்ட எம் .டி .வி. அருண்குமார் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கு ஆளுயர,மாலை அணிவித்துமரியாதைசெய்தார்.உடன்மாவட்டசெயலாளர்இளங்கோவன் மற்றும் புதிய இளைஞரணி நிர்வாகிகள் உள்ளனர்.

### தம்மம்பட்டி அருகே

# அ.தி.மு.க. பிரமுகர் வீட்டில் மது பாட்டில்கள் பறிமுதல்!

தம்மம்பட்டி, பிப். 7

தம்மம்பட்டி அருகே அதிமுக பிரமுகர் வீட்டில் பெட்டி பெட்டியாக பதுக்கி வைத்திருந்த மது பாட்டில்களை தனிப் படை போலீசார் பறிமுதல் செய்தனர்.

சேலம் மாவட்டம் தம்மம்பட்டி அருகே செந்தாரப்பட்டியை அடுத்துள்ள மண்மலை பாலக்காடு பகுதியில் சட்ட விரோதமாக மது பாட்டில்கள் பதுக்கி வைத்திருப்பதாக தெரிவிக்கப் பட்ட புகாரை அடுத்து, எஸ். பி., கவுதம் கோயல் உத்தரவின் பேரில் எஸ்.ஐ. சந்திரன் தலைமையிலான தனிப்படை போலீசார் அப்பகுதியில் தீவிர சோதனை நடத்தினர். அப்போது, சேலம் மேற்கு மாவட்ட அதிமுக முன்னாள் மாணவரணி செயலாளரான பரமசிவம் என்பவரது வீட்டில் பதுக்கி வைத்திருந்த மது பாட்டில்களை பெட்டி பெட்டியாக போலீசார் பறிமுதல் செய்தனர். விசாரணையில், செந்தாரப் பட்டி, கொண்டயம்பள்ளியில் சந்துகடையில் விற்ப



தற்காக, தம்மம்பட்டி 8 ஆவது வார்டு காளியம்மன் கோயில் அருகே வசிக்கும் துரைசாமி மகனான அதிமுக பிரமுகர் விஜி(41) என்பவர், தனது நண்பரான அதிமுக பிரமுகர் பரமசிவத்தின் வீட்டில் கள்ளத்தனமாக பதுக்கி வைத்திருந்தது தெரிய வந்தது.

அதையடுத்து, போலீசார் இருவரையும் கைது செய்து ஆத்தூர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

# சேலம் - கோவை நெடுஞ்சாலை பாலத்தில் கண்டெய்னர் லாரி கவிழ்ந்தது!

## வாகன போக்குவரத்து நிறுத்தம்!!

சேலம் பிப் 7

பெங்களூரில் இருந்து கேரள மாநிலம் பாலக்காடுக்கு, கண்டெய்னர் லாரியில் 27 டன் ஆப்பிள் பழங்



களை ஏற்றிக்கொண்டு லாரிபெங்களூரில்இருந்து பாலக்காடு நோக்கி சென்றது.

லாரியை உத்திர பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த பங்கஜ் யாதவ் ஓட்டி வந்தார்.

இன்று காலை 11:30 மணிக்கு லாரி சேலம் கோவை தேசிய நெடுஞ்சாலையில் பட்டர்பிளை பாலத்தில் வளைவில் வந்தபோது டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்த லாரி தடுப்பில் மோதி கவிழ்ந்தது. இந்த விபத்தில் லேசான காயத்துடன் அதிர்ஷ்டவசமாக டிரைவர் பங்கஜ் யாதவ் உயிர் தப்பினார்.

தகவல் அறிந்த செவ்வாய்பேட்டை தீயணைப்பு நிலைய அலுவலர் சிவக்குமார் தலைமையிலான தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்துக்கு வந்து, லாரியின் டேங்கரில் இருந்து வடிந்த டீசலால் விபத்து ஏற்படாமல் இருக்க தண்ணீர் பாய்ச்சி அடித்து தீப் பற்றுவதை தடுத்தனர்.

தொடர்ந்து லாரியை மீட்கும் பணிகள் நடந்து வருகிறது. இந்த விபத்தின் காரணமாக அந்தப் பகுதியில் போக்குவரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.. இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# மாணவியிடம் சில்மிஷம்; ஆசிரியர் அதிரடி கைது!

சேலம், பிப்.7

சேலம் ஓமலூர் பகுதியை சேர்ந்த 17 வயது மாணவி, அப்பகுதியில் உள்ள அரசு பள்ளியில் பிளஸ்1 படித்து வருகிறார். அந்த பள்ளி மாணவ,மா மாணவிகளுக்கு ஓமலூரில் உள்ள தனியார் பாலிடெக் னிக் கல்லூரியில் கடந்த 2ம் தேதி உயர்கல்வி வழிகாட்டி பயிற்சி வகுப்பு நடந்தது.பயிற்சி முடிந்து குழு புகைப்படம் எடுத்துள்ளனர். அப்போது, அரசு பள்ளி உடற்கல்வி ஆசிரியர் சிவக் குமார் (48), பிளஸ்1 மாணவியிடம் சில்மிஷத்தில் ஈடுபட்டுள்ளார். இது பற்றி பள்ளி தலைமை ஆசிரியரிடம் மாணவி புகார் தெரிவித்தார்.அவர் உடற்கல்வி ஆசிரியர் சிவக்குமார் மீது ஓமலூர் அனைத்து மகளிர் போலீசில் புகார் செய்தார். போலீசார் விசாரணை நடத்தி,ஈரோடு சாஸ்திரிநகரை சேர்ந்த அந்த உடற்கல்வி ஆசிரியர் சிவக்குமார் மீது போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்தனர். தொடர்ந்து நேற்று அவரை கைது செய்தனர்.

### ஜோலார்பேட்டை அருகே

# ஓடும் ரெயிலில் கர்ப்பிணியை கற்பழிக்க முயன்ற காமக்கொடூரன்!

## கூச்சலிட்டதால் கீழே தள்ளினான்!!

ஜோலார்பேட்டை, பிப்.7–

ஆந்திர மாநிலத்தை சேர்ந்த இளம் பெண் ஒருவர் திருப்பூரில் உள்ள தனியார் பனியன் கம்பெனியில் டைலராக வேலை செய்து வருகிறார். இந்நிலையில் 4 மாத கர்ப்பிணியான இவர், மருத்துவ பரிசோதனைக்காக ஆந்திர மாநிலத்திற்கு செல்வதற்காக நேற்று கோயம்புத்தூரில் இருந்து ஜோலார்பேட்டை வழியாக திருப்பதி வரை செல்லும் இன்டர்சிட்டி எக்ஸ்பிரஸ் ரெயிலில் பொது பெட்டியில் பயணம் செய்தார்.

ரெயில் வேலூர் மாவட்டம் குடியாத்தம் ரெயில் நிலையத்துக்கும் கே.வி. குப்பம் ரெயில் நிலையத்துக்கும் இடையே சென்று கொண்டிருந்தது. அப்போது இளம்பெண்கழிவறைக்கு சென்றார். அங்கு போதையில் காமக்கொடூரன் ஒருவன்அந்தகர்ப்பிணிபெண்ணிடம் அத்துமீறி உள்ளான். மேலும் அந்த பெண்ணை கற்பழிக்க முயன்றான். உடனே அந்த பெண் கூச்சல் கேட்டு சக பயணிகள் வருவதற்குள் இளம்பெண்ணை ஓடும் ரெயிலில் இருந்து கீழே தள்ளியதாக கூறப்படுகிறது.

அப்போது எதுவும் தெரியாதது போன்று அவர்கள் வேறொரு பொது பெட்டியில் சென்று தப்பினர். அதன் பின்னர் தண்டவாளத்தின் அருகே படுகாயத்துடன் இருந்த இளம் பெண்ணை அங்கிருந்தவர்கள் ஆம்புலன்ஸ் மூலம் மீட்டு வேலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு தீவிர சிகிச்சை பிரிவில் அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இது குறித்து தகவலறிந்ததும் வழக்கு பதிவு செய்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் மர்ம நபர்களை பிடிக்க ரெயில் நிலையத்தில் பொருத்தப்பட்ட சிசிடிவி கேமராவில் பதிவான காட்சிகளை வைத்து தனிப்படை அமைத்து தீவிரமாக மர்ம நபர்களை தேடி வந்தனர்.

இந்நிலையில் ரெயில் நிலைய பழைய குற்றவாளிகளின் புகைப்படத்தை பாதிக்கப்பட்ட பெண்ணிடம் காட்டி விசாரணை செய்த போது பழைய ரெயில் குற்றவாளியான கே.வி. குப்பம் பூஞ்சோன் நகர் பகுதியியை சேர்ந்த ஹேமராஜ் (வயது 30) என்பவரின் புகைப்படத்தை பாதிக்கப்பட்ட நபர் காண்பித்தார். அவரை ரெயில்வே போலீசார் அவனை கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இவர் மீது ரெயில் நிலையத்தில் மேலும் பல்வேறு வழக்குகள் நிலுவையில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இதில் குற்றவாளி ஹேமராஜ் பல்வேறு வழக்குகளில் சம்பந்தப்பட்டவர் என்பது தெரியவந்தது. இவர் ஏற்கனவே 2022 ஆம் ஆண்டில் ஒரு பெண்ணிடம் ஓடும் ரெயிலில் சங்கிலியை பறித்து விட்டு அந்த பெண்ணை கீழே தள்ளியதாகவும் ஒரு வழக்கு உள்ளது. ஏற்கனவே இவர் தீபா என்ற பெண்ணை 2014 ஆம் ஆண்டு திருமணம் செய்து பின்னர் கழுத்தறுத்து கொலை செய்த வழக்கும் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



சேலம் பனங்காட்டில் உள்ள வெள்ளி கொலுசு உற்பத்தி விற்பனை மையத்தில் நபார்டு அதிகாரிகள் ஆய்வு செய்தனர். அருகில் தலைவர் ஆனந்த ராஜன், செயலாளர் முனியப்பன்,துணைத் தலைவர் முருகேசன் ஆகியோர் உள்ளனர்.

### நாமக்கல், ராசிபுரம்

# வாகன ஆய்வாளர்களுக்கு கூடுதல் பொறுப்பு!

நாமக்கல் பிப்.7

நாமக்கல் வடக்கு வட்டார போக்குவரத்து அலுவலராக, கடந்த 3 ஆண்டுகளுக்கு மேலாக பணியாற்றி வந்த முருகேசன், தற்போது நாமக்கல் தெற்கு வட்டார போக்குவரத்து அலுவலராக நியமிக்கப்பட்டு, பொறுப்பேற்று கொண்டார். நாமக்கல் வடக்கு வட்டார மோட்டார்வாகன ஆய்வாளராக பணியாற்றி வரும் சக்திவே லுக்கு, கூடுதல் பொறுப்பு அளிக்கப்பட்டுள்ளது.

அவர் வட்டார போக்குவரத்து அலுவலர் பொறுப்பையும் சேர்ந்து கவனிப்பார். பரமத்திவேலூர் மோட்டார் வாகன ஆய்வாளராக பணியாற்றி வந்த சரவணன், திருநெல்வேலி மாவட்டத்திற்கு பதவி உயர்வு பெற்று, வட்டார போக்குவரத்து அலுவலராக நியமிக்கப் பட்டுள்ளார். இதையடுத்து நாமக்கல் தெற்கு வட்டார மோட்டார் வாகன ஆய்வாளர் உமா மகேஸ்வரிக்கு, பரமத்தி வேலூர் கூடுதல் பொறுப் பாக அளிக்கப்பட்டுள் ளது.

திருச்செங்கோடு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மோட் டார் வாகன ஆய்வாள ராக பணியாற்றி வந்த பாமபிரியா பதவி உயர்வு பெற்று, வட்டார போக் குவரத்து அலுவலராக மதுரை மாவட்டத்திற்கு மாற்றப் பட்டுள்ளார்.

ராசி புரம் மோட்டார் வாகன ஆய்வாளர் நித்யாவிற்கு திருச்செங்கோடு மோட் டார் வாகன ஆய்வாளர் பொறுப்பு கூடுதலாக அளிக்கப்பட்டுள் ளது. இதற்கான உத்தரவினை தமிழக போக்குவ ரத்து துறை ஆணையர் பிறப்பித்துள்ளார்.

# மரவனேரி, அணைமேடு பகுதியில் ரவுண்டானா!

## போக்குவரத்து நெரிசலை குறைக்க நடவடிக்கை!!

சேலம் பிப் 7

சேலம்மாநகரின்நாளுக்கு நாள் போக்குவரத்து நெரிசல் அதிகரித்து வருகிறது. இதில் குறிப்பாக அம்மா பேட்டை, குகை, ஓமலூர் மெயின் ரோடு, சாரதா கல்லூரி சாலை உள்ளிட்ட பகுதிகளில் வாகனங்களின் எண்ணிக்கை அதிகம். இப்பகுதிகளில் காலை, மாலை பீக் ஹவரில் போக்குவரத்து நெரிசலில் சிக்கி வாகன ஓட்டிகள் அவதிப்பட்டு வருகின்றனர்.சேலம் மாநகரத்தையொட்டி சேலம் விருத்தாசலம் ரயில் வழித்தடம் செல்கிறது. இந்த வழித்தடத்தில் தினசரி 6 பயணிகள் ரயிலும், சரக்கு ரயில்கள் செல்கிறது. முள்ளு வாடி 2வது கேட்டில் மேம்பாலம் கட்டப்படுவதால் மக்கள் பயன்பாட்டுக்கு வந்துள்ளது. சேலத்தை கிழக்கு மற்றும் வடகிழக்கு மாவட்டங்களுடன் இணைக்கக் கூடியதாக அணைமேடு ரயில்வே கேட் உள்ளது. இந்த நிலையில் மேம்பாலத்தில் இறங்கும் பகுதியான மரவனேரியில் 3 ரோடுகள் ஒன்று சேர்கிறது. சில நேரங்களில் வாகனங்கள் திரும்பும்போது விபத்துக்குள் ஏற்படுகிறது. மேலும் மேம்பாலத்தில் இருந்து இறங்கும் வாகனங்களும் மின்னல் வேகத்தில் வருகிறது. இங்கு விபத்தை குறைக்க நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகள் சம்பந்தப்பட்ட இடத்தை ஆய்வு செய்து மரவனேரி மற்றும் அணைமேடும் பாலத்தை இணைக்கும் பகுதியில் ரவுண்டானா அமைக்க முடிவு மேற்கொண்டனர்.

அதன்படி, ரவுண்டானா அமைப்பதற்கான முன்னேட்ட பணிகள் துவங்கப்பட்டு மணல் மூட்டைகள் வைக்கப்பட்டுள்ளது. நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் முன்னேட்டமாக இதனை செயல்பாட்டுக்கு கொண்டு வந்துள்ளனர். அதிகாரிகளின் இந்த நடவடிக்கை பொது மக்கள் டையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.



அந்தேவனப்பள்ளியில் உள்ள அரசு பள்ளியில் தலைமை ஆசிரியர் கைலாசம் தலைமையில் மாணவர்களின் போதை தடுப்பு விழிப்புணர்வு பேரணி நடந்தது. இதில் பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள், ஆசிரியைகள், மற்றும் பெற்றோர்கள் கலந்துக் கொண்டனர்.

### மாணவி கூட்டு பலாத்கார விவகாரம்:

# தலைமை ஆசிரியை, ஆசிரியர்களிடம் அதிகாரிகள் விசாரணை!

கிருஷ்ணகிரி, பிப்.7

8ம் வகுப்பு மாணவி கூட்டு பலாத்காரம் செய் யப்பட்ட விவகாரம் தொடர்பாக தலைமை ஆசிரியை, ஆசிரியைகளி டம் அதிகாரிகள் விசா ரணை நடத்தினர். இத னால் பள்ளிக்கு விடுமுறைவிடப்பட்டதுடன் அங்கு போலீசார்பாதுகாப்பு பணியில் ஈடுபட் டுள்ளனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி தாலுகாவில் ஒரு கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி இயங்கி வருகிறது. அந்த பள் ளியில் 8ம் வகுப்பு படித்து வரும் 13 வயதுடைய மாணவி பள்ளி ஆசிரியர்களால் கூட்டு பலாத்காரம் செய்யப் பட்டார்.

இது தொடர்பாக பர்கூர்அனைத்து மகளிர் போலீசார் விசாரணை நடத்தி,ஆசிரியர்கள்ஆறுமுகம்(வயது48), சின்னசாமி (57), பிரகாஷ் (37) ஆகிய 3 பேரை கைது செய்த னர். அவர்களுக்கு மருத்துவ பரிசோதனை நடைபெற்றது. பின்னர் நேற்று முன்தினம் இரவு அவர்களை போலீசார்.



கிருஷ்ணகிரி கோர்ட்டில் ஆஜர்படுத்தி சேலம் மத்திய சிறையில் தனி அறையில் அடைத்தனர்.

இதற்கிடை யில் ஆசிரியர்கள் 3 பேரும் பணி இடைநீக்கம் (சஸ்பெண்டு) செய்யப் பட்டுள்ளனர்.

தமிழகத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இந்த சம்பவம் தொடர்பாககாவல் துறையினரும், பள்ளி கல்வி துறையினரும் விசாரணைநடத்தி வருகிறார்கள். இந்த சம்பவம் காரண மாக பள்ளிக்கு நேற்று முன்தினம் விடுமுறைவிடப்பட்டது. இதற்கிடையே அரசு தொடக்கப்பள்ளி இணை இயக்குனர் சாந்தி தலைமையில் கல்வித்துறை அதிகாரிகள் சம்பந்தப்பட்ட பள்ளியின் தலைமை ஆசிரியை, மற்றும் ஆசிரியைகளிடம் விசாரணை நடத்தினார்கள். இதையடுத்து நேற்று 2வது நாளாக பள்ளிக்கு விடுமுறை அளிக்கப்பட்டது. நேற்று 2வது நாளாக பர் கூர் துணை போலீஸ் சூப்பிரண்டு முத்துகிரு ஷ்ணன் தலைமையில் 5 இன்ஸ்பெக் டர்கள் மற்றும் போலீசார் பள்ளி வளாகத்தில் பாதுகாப்பு பணிகளை மேற்கொண்டனர்.

சம்பந்தப் பட்ட பள்ளியில் உள்ள மற்ற மாணவ, மாணவிகளுக்கு மனநல ஆலோசனைகள் வழங்கி பள்ளியை திறக்க அதி காரிகள் முடிவு செய்துள்ள தாக கூறப்படுகிறது.

மாணவிகள் யாரிடமும் சில்மிஷத்தில் ஈடுபட்டுள்ளனரா? என்பது குறித்து போலீசார் விசாரித்து வருகின்றனர்.

# குடும்ப தகராறில் கணவர் தூக்கிட்டு சாவு!

சேலம் பிப் .7

கன்னங்குறிச்சி தாமரை நகர் பகுதியைச் சேர்ந்தவர் சக்திவேல் (30). இவருக்கு பொன்னி என்ற மனைவியும், ஒரு மகனும், ஒரு மகளும் உள்ளனர். தினமும் குடித்து விட்டு வருவதால் கணவன்மனைவிஇடையே சண்டை ஏற்பட்டது. இதுகுறித்து பொன்னி அம்மாபேட்டை அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலீசார் அறிவுரை கூறி அனுப்பி வைத்தனர். இந்நிலையில் மனைவி தனது குழந்தைகளுடன் அவரது தாயார் வீட்டிற்கு சென்றதால் மனமுடைந்த சக்திவேல் தனது வீட்டில் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். இதுகுறித்து தகவல் அறிந்த கன்னங்குறிச்சி போலீசார் சக்திவேலின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இது தொடர்பாக வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து அதிகரிப்பு!

பென்னாகரம், பிப்.7

தமிழக கர்நாடக மற்றும் காவிரி நீர் பிடிப்பு பகுதிகளில் ஆங்காங்கே பெய்த மழை அளவு முற்றிலும் குறைந்தது. இதனால் தமி



ழக மற்றும் கர்நாடக எல்லைப் பகுதியில் உள்ள பிலிகுண்டுலுவில் நீர்வரத்து படிப்படியாக குறைந்து கொண்டே வந்தன. இந்த வருடத்தில் நேற்று முதல் முறையாக 300 கன அடியாக சரிந்த நிலையில் ஒகேனக்கல் ஆற்றில் ஆங்காங்கே தண்ணீரில்லாமல் வெறும் பாறைகளாகவே காட்சியளித்தன. இந்த நிலையில் இன்று மீண்டும் திடீரென நீர்வரத்து அதிகரித்து வினாடிக்கு 1200 கான அடியாக நீடித்து வருகிறது. இந்த நீர்வரத்து மீண்டும் குறைவதற்கான வாய்ப்பு உள்ளன.

தற்போது ஒகேனக்கல் காவிரி ஆற்றில் வரக்கூடிய நீர் வரத்தால் சினி பால்ஸ், மெயின் அருவி, ஐந்தருவி உள்ளிட்ட அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டி செல்கின்றன.

## மாணவிக்கு பாலியல் தொல்லை

# பள்ளிக்கல்வித்துறை அமைச்சரின் மாவட்டத்திலே இந்த கொடுமையா?

## எடப்பாடி பழனிசாமி அறிக்கை!

சென்னை:பிப்.07– அதிமுக பொதுச்செயலாளரும், எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமி எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், தெரிவித்துள்ளதாவது:

திருச்சி மாவட்டம் மணப்பாறையில், 4ம் வகுப்பு மாணவி பாலியல் தொல்லைக்கு ஆளானதாக வரும் செய்தி நெஞ்சை பதை பதைக்க வைக்கிறது.

பெண்கள், குறிப்பாக சிறுமிகளுக்கு எதிரான பாலியல் சீண்டல்கள் இந்த ஸ்டாலின் மாடல் திமுக ஆட்சியில் எந்த விதமான அச்சமும் இன்றி அதிகரித்து வருவது மிகுந்த வேதனையை ளிக்கிறது; இது கடும் கண்டனத்திற்குரியது.

மு.க.ஸ்டாலின் அவர்களே பல்வேறு குற்றச்செயல்கள் நடந்து வரும் இவ்வேளையில் விளம்பர போட்டோ ஷூட்டிங் சுற்றுலாவில் நீங்கள் இருப்பது ரோம் நகரம் எரிந்து கொண்டிருக்கும் வேளையில், நீரோ மன்னன் பிடில் வாசிப்பது போல உள்ளது.



ஒரு 4ம் வகுப்பு படிக்கும் சிறுமிக்கு, படிக்கும் பள்ளியில் கூட பாதுகாப்பு இல்லாத அளவிற்கு ஒரு ஆட்சியை நடத்துகிறீர்கள்.

உங்கள் பள்ளிக்கல்வித் துறை அமைச்சரின் மாவட்டத்தில் நடந்திருக்கக் கூடிய இந்த கொடுமைக்கு என்ன பதில் வைத்திருக்கிறது மு.க.ஸ்டாலின் மாடல் ஆட்சி?

மேலும் அதே பள்ளியில் பயிலும் மற்றுமொரு மாணவியும் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டதாகவும், அவர் காவல்துறையில் புகார் அளித்ததாகவும் செய்திகள் வருகிறது.

எனவே சிறுமிக்கு பாலியல் தொல்லை அளித்ததாக கைது செய்யப்பட்டுள்ளவர்கள் மட்டும்தான் இக்குற்றச்சாட்டில் தொடர்பு உள்ளவர்களா? மற்றும் வேறு பலர் உள்ளார்களா என முறையாக விசாரித்து, இதில் தொடர்புள்ள அனைவர் மீதும் மிகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஸ்டாலின் மாடல் திமுக அரசை வலியுறுத்துகிறேன்என்று கூறியுள்ளார்.

# தமிழகத்துக்கு நீதியும் இல்லை;...

1–ம் பக்கத் தொடர்ச்சி

ஆனால், அவர் பேசமாட்டார். நீங்கள் பேசுங்கள் என்றுதான் எனக்கு அனுமதி கொடுப்பார்.

இருந்தாலும், மாநில அரசின் நிதியை வைத்து நிவாரண பணிகளை நாங்கள் செய்தோம். தொடர்ந்து ஒன்றிய அரசிடம் நிதி கேட்டு வலியுறுத்தினோம்.கொடுக்காத அவர்களை கண்டித்தோம். அப்போதும் வரவில்லை. நாடாளுமன்றத்திலும் பேசினோம். அப்போதும் வரவில்லை. ஏன், நீதிமன்றம் சென்றோம். அதன்பிறகுதான் ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கு வெள்ள நிவாரண நிதியை அறிவித்தார்கள். அதுவும் எவ்வளவு? நாம் கேட்டது, 37 ஆயிரத்து 907 கோடி ரூபாய்! வேறு வழியில்லாமல் ஒன்றிய அரசு கொடுத்தது. எவ்வளவு கொடுத்தது வெறும் 276 கோடி ரூபாய்! நாங்கள் கேட்டதில் ஒரு விழுக்காட்டைக் கூட கொடுக்கவில்லை. இப்படிதான் ஒன்றிய அரசு நடந்து கொண்டு இருக்கிறது.

சரிபோகட்டும்! இந்த பட்ஜெட்டிலாவது நாங்கள் கேட்ட நிதிகளை ஒதுக்கித் தருவார்கள் என்று எதிர்பார்த்தோம். அதுவும் இல்லை. தமிழ்நாட்டிற்கு நிதியும் கிடையாது, நீதியும் கிடையாது என்று ஒதுக்கி விட்டார்கள். மீண்டும் மீண்டும் வஞ்சிக்கிறது, ஒன்றிய பா.ஜ.க. அரசு! அவர்களை பொருத்தவரைக்கும், கூட்டணியில் இருக்கும் மாநிலங்களுக்கும், தேர்தல் வரும் மாநிலங்களுக்கும் மட்டும்தான் அறிவிப்புகளையும் நிதியையும் கொடுப்பார்கள். அதனால் தான்நாங்கள்கேட்கிறோம். என்ன கேட்கிறோம்?

இந்தியாவின் வரைபடத்தில் மட்டும், தமிழ்நாடு இருந்தால் போதுமா? அரசாங்கம் வெளியிடும் நிதிநிலை அறிக்கையில் இருக்க வேண்டாமா? ஒன்றிய அரசின் திட்டங்களில் தமிழ்நாட்டின் பெயர் இருக்க வேண்டாமா? தமிழ்நாட்டிற்குசிறப்புத்திட்டங்களை அறிவிக்க வேண்டாமா? தேர்தல் நேரத்தில் வாக்கு கேட்க மட்டும் தமிழ்நாட்டிற்கு வந்தால் போதும் என்று நினைக்கிறார்களா? இப்படி நாங்கள் கேட்கும் கேள்விகள் எதற்கும், பா.ஜ.க.விடம் இருந்து எந்த பதிலும் வராது.

திருநெல்வேலி அல்வா என்றால் உலக அளவில் புகழ்பெற்றது. ஆனால், இப்போது, மாநிலங்களுக்கு ஒன்றிய அரசு தரும் அல்வாதான் அதைவிட புகழ்பெற்றதாக இருக்கிறது! நம்முடைய திராவிட மாடல் அரசை பொறுத்தவரைக்கும் – ஒன்றிய அரசை பொருட்படுத்தாமல், நமக்கு நாமேஎன்று தமிழ்நாட்டை மேம்படுத்தி வருகிறோம். அதனால்தான், ஒன்றிய அரசு வெளியிடும் எல்லா புள்ளிவிவரங்களிலும் முன்னணியில் இருக்கிறோம். அதற்கு காரணம், வாக்களித்த மக்களான உங்களுக்கு, நாங்கள் உண்மையாக இருக்கிறோம்.

ஒன்றிய அரசு மேல் குறை சொல்லிக்கொண்டு எந்த திட்டத்தையும் உருவாக்காமல் விட்டுவிடவில்லை. நாளுக்குநாள் புதுப்புது திட்டங்கள், வந்துக்கொண்டே இருக்கிறது. நாங்கள் உருவாக்கிக்கொண்டே இருப்போம். நேற்றுகூட, கங்கை கொண்டான் சிப்காட்டில், 3800 கோடி ரூபாய் மதிப்பீட்டில்டாடாபவர்சோலார் நிறுவனத்தைத் தொடங்கி வைத்தேன்.

அதுமட்டுமல்ல, 2574 கோடி ரூபாய் மதிப்பீட்டில், விக்ரம் சோலார் நிறுவனத்திற்கு அடிக்கல் நாட்டியிருக்கிறேன். இதில், டாடா பவர் சோலார் நிறுவனத்திற்கு, நாங்கள் ஆட்சிக்கு வந்து 4.7.2022 இல் புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டு, 20.10.2022 இல் அடிக்கல் நாட்டி, நேற்று, அதாவது இரண்டே ஆண்டில் திறந்து வைத்திருக்கிறோம். அந்த தொழிற்சாலை மூலமாக மட்டும் 4000 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கிறது. அதில் முக்கியமானது என்ன என்று கேட்டால், 80 சதவிகிதம் பேர் பெண்கள். அந்த நிறுவனத்திற்கு நான் சென்றபோது, அங்கிருந்த ஒரு பெண் தொழிலாளர் என்னிடம் சொன்னது, அப்பா, எங்கள் ஊரில் எவ்வளவு பெரிய தொழிற்சாலையைக் கட்டி எங்களுக்கு வேலை கொடுத்திருக்கிறீர்கள். நன்றி என்று அந்த மகள் சொன்னபோது நான் நெகிழ்ந்து போனேன்.

அதேபோன்று, விக்ரம் சோலார் நிறுவனத்தை பொருத்தவரைக்கும், கடந்த ஆட்சியில் புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டிருந்தாலும், அதற்கு பிறகு அவர்கள் எந்த முயற்சியும் செய்யவில்லை. அதைப்பற்றி கவலையும் படவில்லை. ஆனால், நம்முடைய அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, தமிழ்நாட்டின் சூழ்நிலையை விளக்கி, உறுதி கொடுத்து அந்த நிறுவனத்தை அழைத்து வந்திருக்கிறோம்! அதிலும், 2500 பேருக்கு வேலை கிடைக்கப் போகிறது. நான் இப்போதே சொல்கிறேன். அங்கும் பெரும்பகுதி மகளிருக்குதான் வேலை வாய்ப்பு. இப்படி சொல்வதால் இந்த மாவட்டத்து ஆண்களுக்கு சிறிது பொறாமை கூட வரும்.

உண்மையை சொன்னால், ஒரு பெண் கல்வி பெற்று பொருளாதார சுதந்திரம் அடைந்தால், அந்த குடும்பத்தின் தலைமுறையே உயர்ந்து நிற்கும். அதனால்தான் என்னுடைய ஆட்சியில் மகளிருக்கான திட்டங்களைப் பார்த்துப் பார்த்து நாங்கள் செய்துக் கொண்டு வருகிறோம்.

இன்றைக்கு விவசாயிகள் பயன்கூடிய வகையில் 77 கோடி ரூபாய் மதிப்பீட்டில், மெகா உணவுப் பூங்காவையும் அதே சிப்காட்டில் திறந்து வைத்திருக்கிறேன். அதன் மூலம் பல ஆயிரம் தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கும்! என்னுடைய இந்த ஆட்சியில், நவீன தொழில்களின் மையமாக தமிழ்நாட்டை உயர்த்த வேண்டும். சென்னை, கோவை என்று மட்டுமல்லாமல், தென் தமிழ்நாட்டில் பிரம்மாண்ட தொழிற்சாலைகள் நிறைய அமைய வேண்டும். இலட்சக்கணக்கான இளைஞர்களுக்கு குறிப்பாக பெண்களுக்கு சிறந்த வேலைவாய்ப்புகளை உருவாக்கவேண்டும் இதுதான் என்னுடைய இலக்கு.

அதை முன்னுரிமையாக கொண்டுதான் திட்டங்களை தீட்டி, முதலீட்டாளர்களுக்கு ஊக்கம் தந்து புதிய வரலாற்றை நம்முடைய திராவிட மாடல் ஆட்சி படைத்துக்கொண்டு இருக்கிறது. படித்த இளைஞர்களுக்கு இங்கேயே நல்ல வேலை கிடைப்பதை உறுதி செய்வோம்!

இந்த தென்பாண்டிச் சீமையை,தொழில்வளர்ச்சி நிறைந்த சீமையாக மாற்றியது இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆட்சி என்று வரும் காலம் சொல்லும்! அந்த அளவுக்கு, வலுவான அடித்தளத்தை உருவாக்கி இருக்கிறேன். உலக அளவிலான முதலீட்டாளர்களாக இருந்தாலும், இந்தியாவின் முன்னணி தொழில் நிறுவனங்களாக இருந்தாலும், அவர்களை நான் சந்தித்தால், "எங்கள் தென்மாவட்டங்களில் தொழில் தொடங்க வாருங்கள்"என்றுதான் நான் கேட்பேன்.

நான் மட்டுமல்ல, நம்முடைய அமைச்சர்களும் அதிகாரிகளும் "தென்மாவட்டங்களில் முதலீடு செய்ய பரிசீலனை செய்யுங்கள்" என்றுதான் வேண்டுகோள் வைத்துநம்முடைய வளர்ச்சியைப் பொறுத்துக் கொள்ள முடியாமல்தான், நம்முடைய ஆட்சிக்கு களங்கம் ஏற்படுத்த சமூக வலைத்தளங்களில் ஒவ்வொரு செய்தியும் எப்படியெல்லாம் திரிக்கிறார்கள்? கருத்துருவாக்கம் செய்கிறார்கள். அவர்களின் நோக்கம் ஒன்று தான்! திமுகவை எப்படி அழிக்கலாம். தமிழ்நாட்டின் வளர்ச்சியை எப்படி கெடுக்கலாம்? ஏன் என்றால், அவர்களின் நீண்டகால திட்டத்திற்கு தடையாக இருக்கிறது நம்முடைய திராவிட மாடல் ஆட்சிதான்! அவர்களால் இதைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. இந்த ஆட்சி இருப்பதால்தான், தமிழ்நாட்டை முன்னேற்றும் திட்டங்களை செயல்படுத்துகிறார்கள். உண்மையான வரலாற்றை தோண்டி எடுக்கிறார்கள். மொழியுணர்வு, கல்வி உரிமை, மாநில உரிமை என்று பேசுகிறார்கள் என்று அவர்களுக்கு நம்மைப் பிடிக்கவில்லை.

நான் உறுதியோடு சொல்கிறேன். தமிழ்நாட்டுக்கு பக்கபலமாக தி.மு.க. ஆட்சி எப்போதும் இருக்கும்! தி.மு.க.,வுக்கு பக்கபலமாக தமிழ்நாட்டு மக்களான நீங்களும் எப்போதும் இருப்பீர்கள்! அவர்கள் என்ன சதி திட்டம் தீட்டி, நேரடியாக வந்தாலும் சரி – துரோகிகளை துணைக்கு அழைத்துக் கொண்டு வந்தாலும் சரி – அதை நாங்கள்நிச்சயம் முறியடிப்போம்.

இவ்வாறு அவர் பேசினார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திருநெல்வேலி அரசு விழாவிற்கு செல்லும் வழியில், மாணவ, மாணவியர்கள் மற்றும் பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

## முன்னாள் பிரதிநிதிகள்

# உள்ளாட்சி தனி அலுவலர்களை மிரட்டுவதை வேடிக்கைப்பார்ப்பதா?

## ஓ.பன்னீர் செல்வம் கண்டனம்!!

சென்னை, பிப்.7

முன்னாள் பிரதிநிதிகள் உள்ளாட்சி தனி அலுவலர்களை மிரட்டுவதை வேடிக்கைப் பார்ப்பதா என்றுதமிழக அரசுக்கு ஓ. பன்னீர் செல்வம் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளி யிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

கடந்த 44 மாத கால தி.மு.க. ஆட்சியில், அரசு ஊழியர்கள், காவல் துறை அதிகாரிகள், உள்ளாட்சி அமைப்புகளைச் சேர்ந்த அதிகாரிகள் என அனைவரையும் மிரட்டி அரசுப் பணிகளில் தலையிடுவதை தி.மு.க.வினர் வாடிக்கையாக கொண்டிருந்தனர். இதற்கு பல உதாரணங்களைக் கூறலாம். இந்த வகையில், தற்போது உள்ளாட்சி அமைப்புகளின்பிரதிநிதிகள் தங்களின் பதவிக் காலம் முடிந்தும் அரசுப் பணிகளில் அவர்களின் தலையீடு தொடர்ந்து நடைபெற்ற வருகிறது.

தமிழ்நாட்டில், 28 மாவட்டங்களில் உள்ள உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளின் பதவிக் காலம் கடந்த ஜனவரி மாதம் முடிவடை ந்ததையடுத்து, அந்த உள்ளாட்சி அமைப்பு களின் நிர்வாகத்தினைக்கவனிக்கதனி அலுவ லர்கள் நியமிக்கப்பட்ட னர். இதனை யடுத்து, மாவட்ட ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சி அலுவலகங்கள் தனி அலுவலர்களின்



கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகின்றன. இருப்பினும், பதவிக் காலம்முடிந்தஉள்ளாட்சி அமைப்புபிரதிநிதிகளின் தலையீடு அதிகரித்து வருகிறது.

உள்ளாட்சி அமைப்புகளில் அடிப்படைப் பணிகளுக்கான ஒப்பந்ததாரர் தேர்வு, புதிய மனைப் பிரிவுகளுக்கு ஒப்புதல் வழங்குவது, கட்டுமானப் பணிகளுக்கு அனுமதி வழங்குவது என அனைத்திலும் பதவிக் காலம்முடிந்தஉள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் தலையிடுவதாகவும், தங்களைக் கேட்காமல் எந்தப் பணிகளையும் மேற்கொள்ளக்கூடாது என்று அதிகாரிகளுக்கு வாய்மொழி உத்தரவு போடுவதாகவும் புகார்கள் வந்த வண்ணம் உள்ளன. இதன் விளைவாக, தெரு விளக்கு பராமரிப்பு, குடிநீர் விநியோகம், சாலைப் பணிகள் போன்றவைகடுமையாக பாதிக்கப்படுகின்றன. இது குறித்து உயர் அதிகாரிகளுக்கு புகார்கள் அளிக்கப்பட்டும், எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.

முதலமைச்சர் இதில் உடனடியாகத் தலையிட்டு, பதவிக் காலம் முடிந்த உள்ளாட்சி அமைப்புகளின்பிரதிநிதிகள் உள்ளாட்சி அமைப்புகளின் பணிகளில் தலையிடு வதை தடுத்து நிறுத்தி, தனி அலுவலர்கள் சுதந்திரமாக செயல்பட வழிவகை செய்து, மக்கள் நலப் பணிகள் தொடர்ந்து நடைபெற ஆவன செய்ய வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## மேலூரில் பயங்கரம்:

# கல்லூரி மாணவர் வெட்டிக்கொலை!

## மர்ம ஆசாமிகளுக்கு வலைவீச்சு!!

மேலூர்,பிப்.7–

மதுரை மாவட்டம் மேலூர்அருகே உள்ளவீர பத்திரன்பட்டியை சேர்ந்த கல்லூரி பேராசிரியர்ராஜபாண்டியன்மகன் பாண்டிக் குமரன் (20) தற்போது மேலூரில் வீடு கட்டி குடியிருந்து வருகின்றனர். பாண்டிக் குமரன் மதுரையில் உள்ள கல்லூரி யில் இரண்டாம் ஆண்டு படித்து வந்தார். நேற்று இரவு 10 மணியளவில் ஒரு போன் கால் வந்ததையடுத்து வெளியில் சென்று வருவதாக கூறி விட்டு தனது காரில் சென்ற பாண்டிக் குமரன் நீண்ட நேரமாகியும் வீடு திரும்பவில்லை.

இதனால் குடும்பத்தினர் அவரை தேடியுள்ளனர்.

இந்த நிலையில் அழகர்கோவில் சாலையில் சூரக்குண்டு விலக்கு அருகே சாலையோரமாக பலத்த வெட்டுக் காயங்களோடு பாண்டிக்குமரன் கொலை செய்யப்பட்டு கிடந்துள்ளார். இதை கண்டு அலறித்துடித்த பெற்றோர் மேலூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தனர்.



தகவலையடுத்து அங்கு விரைந்து சென்ற டிஎஸ்பி சிவக்குமார் மற்றும் ஆய் வாளர் சிவ சக்தி,சார்பு ஆய்வாளர் தினேஷ், தனிப்பிரிவு தலைமை காவலர் தினேஷ் உள்ளிட்டோர் உடலைக் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக மேலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்,

இது தொடர்பாக மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அரவிந்த் உத்தரவுப்படி கல்லூரி மாணவர் கொலையில் தொடர்புள்ளவர்களை பிடிக்க டிஎஸ்பி சிவக்குமார்தலைமையில் தனிப்படை அமைக்கப்பட்டு தீவிர தேடுதல் வேட்டையில் போலீசார் இறங்கியுள்ளனர்,அவரது செல்போனுக்கு கடைசியாக வந்த அழைப்புகள் மற்றும் அப்பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமராக்கள் உள்ளிட்ட தடயங்களை சேகரித்து தீவிர நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

கல்லூரி மாணவர் பாண்டிக் குமரன் படுகொலை சம்பவம் மேலூர்பகுதியில்பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.



உடுமலை நகரில் காலை நேரத்தில் கடும் மூடுபனி நிலவியது. காலை 8 மணி வரை நிலவிய மூடுபனியால்வாகனஓட்டிகள்அவதிப்பட்டனர்.தளிரோடுமேம்பாலத்தில்,முன்சென்றவாகனங்கள் எதுவும் தெரியாததால் வாகன ஓட்டிகள் முகப்பு விளக்குகளை எரியவிட்டபடி சென்றனர்.

## முரசம் 07-02-2025

# நாடு கடத்தல்: அமெரிக்க - இந்திய உறவை பாதிக்குமா?

சட்டவிரோதமாக அமெரிக்காவுக்குள் நுழைந்ததாக குற்றம்சாட்டப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட இந்தியர்களுடன், ராணுவ விமானம் ஒன்று இந்தியாவில் வந்திறங்கியது. அதில் பெரும்பாலானோர் பஞ்சாப், குஜராத் போன்ற மாநிலங்களைச் சேர்ந்தவர்கள். அமெரிக்காவின் அதிபராக டொனால்டு டிரம்ப் பதவியேற்ற பிறகு பல்வேறு நாடுகள் மீது பல அறிவிப்புகளை அவர் வெளியிட்டு வருகிறார். அதே வேளையில் தற்போது, அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறியதாக குற்றம்சாட்டப்பட்டவர்கள் மீண்டும் இந்தியாவுக்கு முதல் முறையாக நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

"அமெரிக்காவில் சட்ட விரோதமாகக் குடியேறியதாக குற்றம்சாட்டப்பட்ட 104 நபர்கள் டெக்சாஸில் இருந்து அமெரிக்காவின் சி–17 போர் விமானத்தில் அவர்கள் அனைவரும் பஞ்சாப் மாநிலத்தின் அமிர்தசரஸில் உள்ள குருராம் தாஸ்ஜி சர்வதேச விமான நிலையத்தில் வந்து தரையிறங்கினர். இவர்கள் உரிய சோதனை நடைமுறைகளுக்கு உட்படுத்தப்பட்ட பிறகு பஞ்சாப், அரியானா, சண்டிகர், உத்தரப்பிரதேசம், குஜராத் உள்ளிட்ட தங்கள் சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். உரிய அரசு ஆவணங்கள் இல்லாமல் அமெரிக்காவில் குடியேறியவர்களை அவர்களின் சொந்த நாடுகளுக்கு கடத்துவதே புதிதாகப் பொறுப்பேற்ற அதிபர் டொனால்டு டிரம்பின் முக்கியக் கொள்கையாக இருக்கின்றது.

அமெரிக்காவில் சட்ட விரோதமாக நுழைந்த 18,000 இந்தியர்களை அந்நாடு அடையாளம் கண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அமெரிக்க அரசின் புள்ளி விவரங்கள்படி, ஒரு கோடிக்கும் மேற்பட்டவர்கள் அமெரிக்காவில் சட்டவிரோதமாகத் தங்கியுள்ளனர். அதில் ஏழு லட்சத்துக்கும் அதிகமானோர் இந்தியர்கள். அதில் பலர் டிரம்ப் நிர்வாகத்தின் இந்தக் கடுமையான நடவடிக்கையால் தற்போது மிகவும் பதற்றமான சூழ்நிலையில் இருக்கின்றனர். "அமெரிக்காவில் ஆவணங்களின்றி வசிக்கும் இந்தியர்கள் குறித்து இந்திய அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும் எனத் தாங்கள் நம்புவதாக" அதிபர் டொனால்டு டிரம்ப் சமீபத்தில் குறிப்பிட்டிருந்தார்.

இதற்குமுன்பாகசட்டவிரோதமாககுடியேறியவர்களை உரிய ஆவண சோதனைகளுக்குப் பிறகு திரும்பப் பெறுவதற்கு முற்றிலும்தயாராக இருப்பதாக இந்தியா தெரிவித்திருந்தது. ராணுவ விமானத்தில் சட்டவிரோதமாகக் குடியேறியதாக குற்றம் சாட்டப்பட்டவர்களை இந்தியாவுக்கு அனுப்புவது குறித்து, அமெரிக்கா கூறுகையில், "உலகளவில் சட்டவிரோதமாக குடியேறியவர்களை வெளியேற்றும் செயல்முறையைத் துரிதப்படுத்துவதற்கான அமெரிக்க நிர்வாகத்தின் முயற்சிகளை அமெரிக்க ராணுவம் ஆதரிக்கிறது" என்றது. அதே வேளையில், டெல்லியில் உள்ள அமெரிக்க தூதரகம், "தற்போது நாடு கடத்தப்பட்டவர்கள் அமெரிக்கா–மெக்சிகோ எல்லை அல்லது அமெரிக்கா –கனடா எல்லை வழியாக சட்டவிரோதமாக அமெரிக்காவுக்குள் நுழைய முயன்றனர். அவர்களிடம் அமெரிக்காவில் தங்குவதற்கான உரிய ஆதாரங்கள் இல்லை," என்று தெரிவித்தது.

மேலும் ஒரு நீண்ட மற்றும் விரிவான சோதனை செயல்முறைக்குப் பிறகே இவர்கள் நாடு கடத்தப்பட்டதாக அமெரிக்க அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார். சில மாதங்களுக்கு முன்பு பஞ்சாப் மாநிலம் குர்தாஸ்பூரில் உள்ள தனது வீட்டைவிட்டு வெளியேறி அமெரிக்கா சென்ற ஒருவர் தற்போது நாடு கடத்தப்பட்டு மீண்டும் இந்தியா வந்துள்ளார். இது தவிர அமெரிக்காவில் வாழும் மற்ற இந்திய குடியேறிகளும் பெரும் பதற்றத்தில் இருக்கின்றனர். "டிரம்ப் தனது அதிபர் தேர்தல் பிரசாரத்தின்போதே குடியேற்றம் குறித்து நடவடிக்கை எடுக்கப்போவதாக" அறிவித்திருந்தார். அதனால் தற்போது அவரது அரசாங்கம் எடுத்துள்ள இந்த நடவடிக்கை அதிர்ச்சியூட்டும் ஒன்றாக இருக்காது. அதனால் இது பெரிய அளவில் இரு நாட்டு உறவுகளில் எந்தப் பாதிப்புகளையும் ஏற்படுத்தாது என்று சமூகப்பணித்துறை பேராசிரியரான கிளாட்ஸன் சேவியர் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்திய பிரதமர் நரேந்திர மோடி, வரும் நாட்களில் அதிபர் டொனால்டு டிரம்பை சந்திக்க அமெரிக்கா செல்லக்கூடும் என்று ஊடகங்களில் செய்தி வெளியாகின. அது குறித்துப் பேசிய அவர், "அவர்களுக்குள் நடக்கவுள்ள பேச்சுவார்த்தைகளில் குடியேற்றம் பற்றிப் பெரும்பாலும் எதுவும் இருக்க வாய்ப்பில்லை. இது முன்கூட்டியே இரு நாட்டின் தலைவர்கள் சமீபத்தில் தொலைபேசி வாயிலாகப் பேசி எடுத்த முடிவுதான்," என்றார். தற்போது நாடு கடத்தப்பட்டவர்களுக்கு மட்டுமேதான் மிகப்பெரிய பிரச்சினை இருக்கிறது. அவர்கள் அனைத்து அரசாங்க ஆவண சரிபார்ப்புக்கும் இணங்கிச் செயல்பட வேண்டும். அவர்கள் அதிகளவில் பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும், குறிப்பாகப் பல ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்காவுக்கு குடியேறியவர்கள் இந்தியாவில் தங்களுக்கென வாழ்வதற்கான இடங்களை இழந்திருப்பார்கள். இதற்கு அரசு எந்தவிதத்திலும் உதவ முடியாது," என்று அவர் தெரிவித்தார்.

## திருச்சி அருகே சோகம்:

# பள்ளி வேன் சக்கரத்தில் சிக்கி குழந்தை பரிதாப சாவு!

## உடலை மீட்டு போலீசார் விசாரணை!!

திருவெறும்பூர், பிப்.7–

திருச்சி மாவட்டம் திருவெறு ம்பூர் அருகே பள்ளி வேன் சக்கரத்தில் சிக்கி ஒன்றரை வயது குழந்தை பரிதாபமாக இறந்தது பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.திருச்சி மாவட்டம் திருவெறும்பூர் அருகே உள்ளது பெல் நிறுவனம் இங்கு ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இந்நிறுவனத்தில் தர கட்டுப்பாட்டு பிரிவில் மேலாளராக பணிபுரிந்து வருபவர் கிளிஸ்டன் ஆப்ரஹாம். இவரது மனைவி மெர்லின் மேத்யூ இவர் திருச்சியில் உள்ள ஒரு தனியார் கல்லூரியில் பேராசிரியராக பணிபுரிந்து வருகிறார். இவர்களுக்கு எய்டன்,(7) எரிக்(1 1/2) ஒன்றரை வயது இரண்டு மகன்கள் ஆவர் கணவன் மனைவி இருவரும் இன்று காலை வேலைக்கு சென்று விட்டனர். வீட்டில் வேலை செய்யும் பெண் பணியாளர் காட்டூர் மான்போர்ட் பள்ளியில் படித்து வரும் எய்டன் சிறுவனை வீட்டு வாசலில் பள்ளிக்கு அனுப்ப வந்திருந்த வேனில் ஏற்றி விட்டார். அப்பொழுது பின்னால் வந்த எரிக் என்கின்ற ஒன்றரை வயது குழந்தை வேனின் பின்புற சக்கரத்தின் உள்ளே நின்றிருப்பது பணியாளரும் வேன் டிரைவரும் கவனிக்கவில்லை. அடுத்த சில நொடிகளில் வேன் கிளம்பவும் ஒன்றரை வயது குழந்தை வேன் சக்கரத்தில் சிக்கி தலை நசுங்கி பரிதாபமாக சம்பவ இடத்திலேயே இறந்து விட்டது. இதுகுறித்து தகவல் அறிந்த பெற்றோர் பெல் நிறுவன காவல் நிலையத்தில் புகார் செய்தனர்இதனைஅடுத்து போலீசார் இறந்த குழந்தையின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக துவாக்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து கவன குறைவாக விபத்து ஏற்படுத்தி குழந்தை சாவுக்கு காரணமான வேன் டிரைவர் சதீஷ்குமாரை பிடித்து போலீசார் விசாரணை செய்து வருகின்றனர். இச்சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

### தமிழகத்தில்

# 7-வது முறையாக தி.மு.க. ஆட்சியைப் பிடிக்கும்!

## முதல்வர் ஸ்டாலின் உறுதி!!

திருநெல்வேலி, பிப்.7– தமிழகத்தில் ஏழாவது முறையாக திமுக ஆட்சியைப் பிடிக்கும் என்றார் தி.மு.க. தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் கூறினார்.

பாளையங்கோட்டை நூற்றாண்டு மண்டபத்தில் மாற்றுக்கட்சியினர் தி.மு.க.வில் இணையும் விழா நடைபெற்றது. இதில், முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:– பா.ஜ.க.வின் திருநெல்வேலி மாவட்ட முன்னாள் தலைவர் தயாசங்கர் தலைமையில் நூற்றுக்கும் மேற்பட்டோர்தி.மு.க.வில் இணைந்துள்ளனர். அவர்களை எனது சார்பாகவும், முன்னாள் முதல்வர் மு.கருணாநிதி சார்பாகவும் வரவேற்கிறேன்.தி.மு.க.வுக்கு வலு மற்றும் புகழ் சேர்க்கும் வகையில் மாற்றுக்கட்சியில் இருந்து விலகி தி.மு.க.வில் சேர்ந்துள்ள தொண்டர்களை வரவேற்கிறேன்.

தி.மு.க. ஆட்சியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் மக்களுக்காகப் பணியாற்றும் இயக்கம். தி.மு.க.வை அண்ணா தொடங்கியபோது ஆட்சிக்கு வருவதோ, பதவியை அலங்கரிப்பதோ நோக்கமல்ல என்றார். ஏழைஎளிய மக்களுக்காக, பாட்டாளிகள், தொழிலாளர்கள், விவசாயிகள் என ஒட்டுமொத்த தமிழக மக்களுக்காக பாடுபடும் இயக்கமாகவே தி.மு.க. இருந்தது. தி.மு.க. தொடங்கப்பட்ட காலத்தில் தேர்தலில் போட்டியிடலாமா என்பதையே தொண்டர்களிடம் வாக்கெடுப்பு



நடத்திதான் முடிவு செய்யப்பட்டது. போட்டியிட்ட முதல் தேர்தலிலே ஆட்சியைப் பிடிக்காவிட்டாலும், தொடர்ந்து படிப்படியாக மக்களுக்காக உழைத்து தி.மு.க. ஆட்சியைப் பிடித்தது.

ஆனால், இப்போது கட்சித் தொடங்கியதுமே சிலர் ஆட்சியைப் பிடிப்போம் என்கிறார்கள். மக்களிடம் அவர்களது திட்டம் எடுபடாது. தங்களுக்காக உழைப்பவர்கள் யார் என்பதை மக்கள் நன்கு அறிவார்கள். ஏற்கெனவே 6 முறை ஆட்சியைப்பிடித்துள்ளதி.மு.க, மீண்டும் ஏழாவது முறையாக ஆட்சியைப்பிடிக்கும். தொண்டர்கள், மக்களின் ஆதரவோடு வெல்வோம். இவ்வாறு அவர் பேசினார்.

விழாவில் தமிழக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை அமைச்சர் கே.என்.நேரு வரவேற்றார். நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், தி.மு.க. திருநெல்வேலி கிழக்கு மாவட்டச் செயலர் இரா. ஆவுடையப்பன், மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தயாசங்கர் நன்றி கூறினார். இந்த விழாவில் பா.ஜ.க.விலிருந்து விலகிய தயாசங்கர், வேல் ஆறுமுகம் தலைமையில் 500–க்கும் மேற்பட்டோரும், அ.தி.மு.க.விலிருந்து இளங்காமணி தலைமையில் 10 பேரும் அக்கட்சிகளில் இருந்து விலகி தி.மு.க.வில் இணைந்தனர்.

# நாட்டின் மிக உயர்ந்த தலைவர் பிரதமர் நரேந்திரமோடி!

## தேவகவுடா புகழாரம்!!

புதுடெல்லி, பிப்.7– 'பிரதமர்நரேந்திரமோடி நாட்டின் மிக உயர்ந்த தலைவர் என்று முன்னாள் பிரதமரும், மதசார்பற்ற ஜனதா தளம் கட்சி எம்.பி.யுமான தேவகவுடா புகழாரம் சூட்டினார்.

மாநிலங்களவையில் குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மான விவாதத்தில் பங்கேற்று அவர்பேசியதாவது:–

மிகவும் பின்தங்கிய சூழலில் இருந்து வந்த பெண்மணியை நாட்டின் குடியரசுத் தலைவராகத் தேர்வு செய்ததற்காக பிரதமர் மோடிக்கு பாராட்டு தெரிவிக்கிறேன். நாட்டை எவ்வாறு திறமையாக வழி நடத்த வேண்டும் என்பதை பிரதமர் நன்கு அறிந்துள்ளார். மாநில முதல்வராகவும், பிரதமராகவும் பல ஆண்டுகள் பணியாற்றி நல்லதொரு அனுபவத்தை அவர் பெற்றுள்ளார்.

இப்போதைய சூழலில் நாட்டின் மிக உயர்ந்த தலைவர் நமது பிரதமர் தான். சிறந்த தலைமைப் பண்பும், அனுபவ அறிவும் அவருக்கு உள்ளது. இதன் மூலம் நாட்டை திறமையாக வழி நடத்தி வருகிறார்.

குடியரசுத் தலைவர் உரையில் நடுத்தர மக்கள், இளைஞர்கள், பெண்கள் உள்ளிட்டோருக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருந்தது. இலக்குகளுக்கு உரிய முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கு ஒரு நிலையான அரசு 5 ஆண்டுகள் ஆட்சியில் இருக்க வேண்டியது அவசியம். எங்களைப் போன்ற பிராந்திய கட்சிகளின் ஆதரவுடன் இந்த அரசு 5 ஆண்டு ஆட்சியை முழுமையாக நிறைவு செய்யும்.

விவசாயிகள் உள்பட பல்வேறு தரப்பினருக்கான நிதி உதவிகள் அறிவிப்பு குடியரசுத் தலைவர் உரையில் இடம் பெற்றுள்ளது. இது எதிர்க்கட்சிகளால் ஜீரணிக்கவே முடியாத விஷயமாகும்.

நான் சிறுவயது முதல் வாழ்க்கையில் பல போராட்டங்களை எதிர்கொண்டுள்ளேன். அரசியலிலும், பிரதமராகப் பணியாற்றியகாலகட்டத்திலும் பல்வேறு கடினமான சூழ்நிலையை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. நான் மிகவும் குறைந்த காலமே பிரதமராகப் பதவி வகித்த போதிலும், அப்போது ராஜஸ்தானில் ஜாட் மக்களுக்கு இடஒதுக்கீடு அளிக்கப்பட்டது. கர்நாடகத்தில் காங்கிரஸ் ஆட்சியில் ஊழல் தான் முதன்மையாக உள்ளது.

இவ்வாறு அவர் பேசினார்.

### பேத்திக்கு பாலியல் தொந்தரவு கொடுத்த

# தாத்தாவுக்கு 25 ஆண்டுகள் சிறை தண்டனை!

## தேனி போக்சோ கோர்ட் தீர்ப்பு!!

தேனி,பிப்.7 தேனி மாவட்டம் பெரியகுளம் பகுதியைச் சேர்ந்தவர் 72 வயதான முதியவர்.

இவருக்கு, ஒரு மகளும் ஒரு மகனும் உள்ளனர். மகள் திருமணம் ஆகி வெளியூரில் வசித்து வருகிறார்.மகனுக்கு திருமணம் ஆகி ஒரு பெண் ஒரு ஆண் குழந்தை உள்ளது.

இந்த நிலையில் மகனுக்கும் மருமகளுக்கும் இடையே சண்டை ஏற்பட்டதால் இருவரும் வீட்டை விட்டு சென்று விட்டனர்.

பிறகு இரண்டு குழந்தைகளையும் முதியவரின் மனைவி வளர்த்து வருகிறார். இந்த சூழலில் சம்பவ நாளன்று பள்ளி விடுமுறை நாள் என்பதால் பிள்ளைகளைவீட்டில்விட்டுவிட்டு மூதாட்டி காளவாசல் வேலைக்கு சென்றவர், மதியவேளையில்வீட்டிற்கு வந்து, பார்த்தபோது இவரது கணவரான 72 வயதான முதியவர், இவரது பேத்தியான 10 வயது சிறுமியிடம் தவறாக நடந்து கொண்டிருந்தது தெரியவந்துள்ளது

இதையடுத்து பாதிக்கப்பட்ட சிறுமியின் பாட்டி இது தொடர்பாக கடந்த 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27ஆம் தேதியன்று அவரது கணவர் மீது பெரியகுளம் மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். இப்புகாரின் பேரில் போலீசார் 72 வயதான முதியவர் மீது போக்சோ வழக்குப்பதிவு செய்து, அவரை கைது செய்து சிறையில் அடைத்தனர். பிறகு இது குறித்த வழக்கு தேனி மாவட்டம் முதன்மை சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில் நேற்று வழக்கின் இறுதி முடிவில் நீதிபதி கணேசன் 72 வயதான முதியவருக்கு 25 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும் ரூ.5 ஆயிரம் அபராதமும் அபராத தொகை கட்ட தவறினால் 2 மாதம் மெய் காவல் சிறை தண்டனையும், இவர் ஏற்கனவே சிறையில் இருந்த காலத்தை அவருக்கு விதிக்கப்பட்ட தண்டனை காலத்திலிருந்து கழித்து கொள்ள வேண்டும் என தீர்ப்பளித்தார்.



புஞ்சை புளியம்பட்டி அருள்மிகு அய்யனார் மற்றும் வீரமாத்தி அம்மன் கோவிலில் நடைபெறும் திருவிழாவை முன்னிட்டு அம்மன் சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார்,பக்தர்கள் நேர்த்திக்கடனாக ஆட்டு கிடாய்களை வெட்டினர்.



நாமக்கல் கலெக்டர் உமா சேந்தமங்கலம் ஊராட்சி ஒன்றியம், காளப்பநாயக்கன்பட்டி அங்கன்வாடி மையத்தில் ஆய்வு மேற்கொண்டார்.

### தேசவிரோத செயல்களில் ஹசீனா

# இந்திய தூதரை அழைத்து வங்கதேசம் கண்டனம்!

டாக்கா, பிப். 7 இந்தியாவில் தஞ்சமடைந்துள்ள வங்கதேச முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா, வங்கதேசத்துக்கு விரோதமான நடவடிக்கையில் ஈடுபடுவதாக இந்திய துணைத் தூதரை நேரில் அழைத்து அந்நாட்டு அரசு கண்டனம் தெரிவித்தது.

வங்கதேசத்தில் இட ஒதுக்கீட்டுக்கு எதிரான மாணவர்களின் போராட்டம் தீவிரம் அடைந்ததையடுத்து அவாமி லீக் கட்சியின் தலைவரான ஷேக் ஹசீனா,பிரதமர்பதவியை ராஜினாமா செய்துவிட்டு இந்தியாவில் கடந்த ஆண்டு தஞ்சம் அடைந்தார்.

இந்நிலையில், சமூக வலைதளம் வாயிலாக தற்போதைய வங்கதேச இடைக்கால அரசுக்கு எதிராக அந்நாட்டு மக்களிடம் ஷேக் ஹசீனா உரையாற்றினார். 'தற்போதைய இடைக்கால அரசுக்கு எதிராக நாட்டு மக்கள் ஒன்று திரள வேண்டும்' என்று உரையில் ஹசீனா கேட்டுக் கொண்டார்.

ஹசீனாவின் உரை வெளியாகிக் கொண்டிருந்தபோதே டாக்காவில் உள்ள அவரது தந்தையும் வங்கதேசத்தின் தந்தையுமான ஷேக் முஜிபூர் ரஹ்மானின் இல்லத்தை போராட்டக்காரர்கள் சூறையாடினர்.

இதைத் தொடர்ந்து, ஷேக் ஹசீனாவின் உரை தொடர்பாக இந்தியாவிடம் வங்கதேசம் கடும் கண்டனத்தை பதிவு செய்தது.

இது தொடர்பாக வங்கதேச வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'இந்தியாவில் இருந்து கொண்டு வங்கதேசத்தில் கிளர்ச்சியைத் தூண்டும் வகையில் ஷேக் ஹசீனா தொடர்ந்து தவறான கருத்துகள் மற்றும் அறிக்கைகளை வெளியிடுகிறார்.

இதுகுறித்து டாக்காவில் உள்ள இந்திய துணைத் தூதர் பவன் பாதேவை நேரில் அழைத்து கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

அவரது இத்தகைய நடவடிக்கைகள் வங்கதேசத்துக்கு விரோதமான செயலாகவும் இந்தியா – வங்கதேசம் இடையே ஆரோக்கியமான உறவை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளுக்கு தடையாகவும் உள்ளன' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

முஜிபுர் ரஹ்மானின் வரலாற்றுச் சிறப்புமிக்க இல்லம் சூறையாடப்பட்ட செயலுக்கு இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது. வங்கதேசத்தில் விடுதலைக்காக போராடியவர்களுக்கு மதிப்பு அளிக்கப்படவில்லை என்று இந்தியா தெரிவித்துள்ளது.



சேலம் மாவட்டம் நடுவலூர் ஊராட்சியில் கடந்த மூன்று மாதமாக குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் இல்லை என கோரி பொதுமக்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

### நிவாரண நிதி பெற்றுத் தராமல்

# அரைவேக்காடு அறிக்கையினை வெளியிட்டு நீலிக்கண்ணீர் வடிப்பதா?

## அண்ணாமலைக்கு அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் கண்டனம்!

சென்னை,பிப்.7 மத்தியஅரசிடம்இருந்து நிவாரண நிதியைப் பெற்றுத் தராமல் அரைவேக்காடு அறிக்கையினை வெளியிட்டு அண்ணாமலை நீலிக்கண்ணீர் வடிப்பதா என்று அமைச்சர் கே. ஆர்.பெரியகருப்பன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்கூறியிருப்பதாவது:–

நாளுக்கு ஒரு பிரச்சினை, வேலைக்கு ஒரு கருத்து என்று ஏதாவது திராவிட மாடல் அரசை குறை சொல்ல வேண்டும் என்ற நோக்கத்தோடு செயல்படும் தமிழக பா.ஜ.க தலைவர் அண்ணாமலை மீண்டும் ஒரு முறைதன்அரைவேக்காட்டுத் தனத்தை நிருப்பித்துள்ளார்.

திராவிட மாடல் அரசு இதுவரை என்ன செய்தது என்று முழு விவரங்களையும் கேட்டுக் தெரிந்துக் கொள்ளமால் இன்று கடமைக்காக ஒரு அறிக்கையினை வெளியிட்டுள்ளார்.அதில் விவசாய பிரச்சினை எனத் தொடங்கி, சட்டம் ஒழுங்கு என பல்வேறு புலம்பல்களைச் சொல்லி மீண்டும் மீண்டும் திமுகவை வம்புக்கு இழுக்கிறார். குறிப்பாக திமுக தேர்தல் அறிக்கையில் சிறு, குறு விவசாயிகளின் கடன் தள்ளுபடி என்று அறிவித்ததை சுட்டிக்காட்டி அர்த்தமற்ற, அவசியமில்லாத, தொடர்பற்ற வினாவினை எழுப்பியுள்ளார்.

முதல்வர் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின் 2021–2022–ஆம் ஆண்டில் முதல்முறையாக



ரூ.10,635.37 கோடி பயிர் கடன்களை 15,44,679 விவசாயிகளுக்கு வழங்கியது.

31.03.2025 வரை நான்கு ஆண்டு காலத்தில் ரூ.61,007.65 கோடி கடன்களை 79,18,350 விவாசய பெருமக்களுக்கு கடனாக பயிர் வழங்கியுள்ளது. விவசாய பெருமக்களை ஊக்குவிக்கும் விதமாக பயிர்கடன்களை குறிப்பிட்ட காலத்திற்குள் முறையாகதிருப்பி செலுத்தும் விவசாயிகளுக்கு வட்டியை தமிழக அரசே செலுத்தி வருகிறது.

தமிழக அரசு கூட்டுறவு வங்கிகள் மூலமாக விவசாயிகளுக்கு கடன் அதிக அளவில் வழங்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக தமிழக நிதியை வழங்கி எப்பொழுதும் இல்லாத அளவில் பயிர்கடன்கள் அதிக அளவில் விவசாய பெருமக்களுக்கு இவ்வரசு வழங்கி வருகிறது.

விவசாயிகள் விவசாயத்திற்கு பயன்படுத்தும் வகையில் உரம் மற்றும் விதைகள் போன்றவை தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் மூலம் மானிய விலையில் தரமானதாகவும் வழங்கி வருகிறது. மேலும், மேற்கண்ட பல்வேறு சேவைகளை தமிழக முதல்வர் ஆலோசனையின் படி கூட்டுறவுத்துறை சிறப்பாக செய்து வருகிறது. புயல், வெள்ளம் போன்ற இயற்கை சீற்றக் காலங்களில் மக்களுக்கு வழங்க வேண்டிய நிவாரண உதவிகள் எதையும் ஒன்றிய அரசிடமிருந்து பெற்றுத் தராமல் அண்ணாமலை சிறுபிள்ளைத்தனமாக அரைவேக்காடு அறிக்கையினைவிடுத்துதான்குழம்புவது மட்டுமல்லாமல், மக்களையும் குழப்பும் நோக்கத்தோடு செயல்படும் பா.ஜ.க. மாநில தலைவரின் செயல்பாட்டிற்கு கடும் கண்டனத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

### நிலவு ஆய்வு திட்டம் தோல்வி:

# ரஷ்ய விண்வெளி ஆய்வு மையத் தலைவர் நீக்கம்!

மாஸ்கோ, பிப். 7 47 ஆண்டுகளுக்குப் பிறகு முதல்முறையாக ரஷ்யா கடந்த 2023–ஆம் ஆண்டு மேற்கொண்ட நிலவு ஆய்வுத் திட்டம் தோல்வி அடைந்தது தொடர்பாக, அந்த நாட்டு விண்வெளி ஆய்வு மையமான ராஸ்கோஸ்மாசின் தலைவர் யூரி போரிஸொவ் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.நிலவின் தென்துருவப் பகுதியில் ஆய்வு மேற்கொள்வதற்காக கடந்த 2023–ல் செலுத்தப்பட்ட லூனா–25 விண்கலம் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக நிலவில் தரையிறங்குவதற்கு பதில் விழுந்து நொறுங்கியது.

இந்தச் சூழலில், ராஸ்கோஸ்மாஸ் தலைவர் பொறுப்பிலிருந்து யூரி போரிஸொவ் அகற்றப்படுவதாக ரஷ்ய அதிபர் மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முடிவுக்கான காரணம் குளித்து அந்த அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றாலும், லூனா–25 ஆய்வுத் திட்ட தோல்வி காரணமாகவே யூரி போரிஸொவ் நீக்கப்பட்டுள்ளதாக தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

### தேனி அருகே பரிதாபம்:

# விஷ மாத்திரை சாப்பிட்ட தம்பதி! கணவர் சாவு!!

தேனி,பிப்.7 தேனி மாவட்டம் கடமலைக்குண்டு அருகே பாலூத்தை சேர்ந்தவர் மொட்டையன் மகன் கூலித்தொழிலாளி செல்வம் (49) இவரது மனைவி இந்திரா(39). இவர்களுக்கு தினேஷ் குமார் சங்கீதா என இரண்டு மக்கள் உள்ளனர்.

செல்வம் மது குடித்து வந்ததால் ஒரு வருடத்திற்கு முன்பு சிறுநீரகம் பாதிப்புஏற்பட்டுஅறுவை சிகிச்சை செய்தும், தொடர்ந்து மது குடித்து வந்ததால் கணவன் மனைவி இருவருக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் பிப். 5ஆம் தேதி அன்று செல்வத்திற்கு வலது பக்க கிட்னியில் வைத்துள்ள பைப்பில் இருந்து தண்ணீர் வடிந்துள்ளது. இதனால் மனமுடைந்த செல்வமும் அவரது மனைவியும் சேர்ந்து தற்கொலை செய்து கொள்ளப் போவதாகவும், பிள்ளைகளுக்கு எந்த வேலையும் வாங்கிக் கொடுக்க முடியவில்லை என்று சொல்லி பேசி மன அழுத்தத்தில் இருந்து வந்ததாக வும், அன்று இரவு கணவன் மனைவி இருவரும் தற்கொலை செய்வதற்காக விஷ மாத்திரைகளை சாப்பிட விழித்த போது அப்போது அங்கு வந்த தினேஷ்குமார் அம்மா கையில் வைத்திருந்த மாத்திரைகளை தட்டி விட்டதாக கூறப்படுகிறது.

அப்போது அவரது அம்மா, உனது அப்பா விஷ மாத்திரையை சாப்பிட்டு விட்டார் என்று கூறியதை அடுத்து, இருவரையும் தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு இருவரும் சிகிச்சை பெற்று வந்த நிலையில் செல்வம் நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இந்திரா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்த சம்பவம் குறித்து கடமலைக்குண்டு போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

### சின்னமனூர் அருகே

# ஜாமீனில் வந்தவர் வெட்டிக்கொலை!

## முன்விரோதத்தில் பயங்கரம்!!

சின்னமனூர் பிப். 7, சின்னமனூரரை அடுத்துள்ள அப்பிப்பட்டி கிழக்குத் தெருவை சேர்ந்தவர் வேல்மணி (54). அதே தெருவில் இட்லி கடை வைத்து நடத்தி வரும் ராணி என்பவருக்கும் வேல்மணிக்கும் கடந்த மாதம் சாக்கடை கடத்துவதில் ஏற்பட்ட பிரச்சனையில் வேல்மணி ராணியை தாக்கியதாக போலீசில் புகார் அளிக்கப்பட்டு புகாரின் பேரில் கைது செய்யப்பட்ட வேல்மணி தற்போது ஜாமீனில் ஊருக்கு வந்துள்ளார்.

ஜாமீனில் வந்தவர் நேற்று இரவு வெளியே நின்று கொண்டிருந்த போது அப்போது அங்கு வந்த ராணியின் உறவினரான சிவச்சந்திரன் (29) என்பவர் தன் உறவினரான ராணியை எப்படி தாக்கலாம் என்று கூறி அரிவாளை எடுத்து வந்து வேல்மணியின் தலை, கழுத்து ஆகிய பகுதிகளில் வெட்டியதில் வேல்மணி ரத்த வெள்ளத்தில் சரிந்தார். மேலும் அரிவாளால் வெட்டிய சிவச் சந்திரன் ஓடைப்பட்டி காவல் நிலையத்தில் ஆஜராகினார். ரத்த வெள்ளத்தில் கிடந்த வேல்மணியை சின்னமனூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அப் போது, ஏற்கனவே அவர் இறந்து விட்டதாக மருத்துவர்கள் கூறியதை அடுத்து, அவரது உடல் பிரேத பரிசோதனைக்காக தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. சாக்கடை பிரச்சனையில் கொலை நடந்திருப்பது அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது. ஓடைப்பட்டி போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை செய்து வருகின்றனர்

# ஒகேனக்கல் காவிரி ஆற்றில் அடையாளம் தெரியாத ஆண் பிணம்!

## போலீசார் விசாரணை!!

பென்னாகரம், பிப்.7 தமிழகத்தின் சிறந்த சுற்றுலா தளமான ஒகேனக்கலுக்கு நாள்தோறும் ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் வந்து அருவியில் குளித்தும் பரிசலில் சென்று மகிழ்வர்.

இந்த நிலையில் நேற்று ஒகேனக்கல் சின்னாறு காவிரி ஆற்றில் 45 வயது மதிக்கத்தக்க அடையாளம் தெரியாத ஆண் பிணம் மிதந்து வந்துள்ளது. இதனைப் பார்த்த பரிசல் ஒட்டிகள் உடனடியாக ஒகேனக்கல் போலீசுக்கு தகவல் தெரிவித்தனர். தகவலின் பெயரில் சம்பவ இடத்திற்கு வந்த போலீசார் பரிசல் ஒட்டிகள் உதவியுடன் ஆற்றில் மிதந்த சடலத்தை மீட்டனர். பின்னர் பிரேத பரிசோதனைக்காக பென்னாகரம் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இது தொடர்பாக ஒகேனக்கல் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்

தினந்தோறும் மாலை முரசு படியுங்கள்

### குதிரை பேரத்தால் பரபரப்பு உச்சம்:

# டெல்லியில் வேட்பாளர்களுக்கு ரூ.15 கோடி, அமைச்சர் பதவி!

## பா.ஜ.க. மீது ஆம்ஆத்மி பாய்ச்சல்!!

புதுடெல்லி, பிப்.07–

யூனியன் பிரதேசமான டெல்லியில் நாளை காலை வாக்கு எண்ணிக்கை தொடங்குகிறது. ஆனால் இப்போதே அங்கு குதிரை பேரம் மும்முரமாக நடைபெற்று வருகிறது. இதனால் பரபரப்பு உச்சம் பெற்றுள்ளது. ஆம் ஆத்மிவேட்பாளர்களுக்கு தலா ரூ.15 கோடி, அமைச்சர் பதவி தருவதாக வாக்குறுதி அளித்து பா.ஜ.க. வலைவீசி உள்ளதாக ஆம் ஆத்மி குற்றம்சாட்டி உள்ளது.

டெல்லி சட்டசபை தேர்தலுக்கான வாக்குப்பதிவு நேற்று முன்தினம் நடந்தது. நாளை வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன. இந்நிலையில், ஆம் ஆத்மி கட்சியின் எம்.பி.யான சஞ்சய் சிங் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர்கூறியதாவது:

சட்டசபைத் தேர்தலில் போட்டியிட்ட ஆம் ஆத்மியின் 7 வேட்பாளர்களுடன் பா.ஜ.க. சார்பில் தொலைபேசியில் பேசியுள்ளனர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் பா.ஜ.க.வில் சேர தலா 15 கோடி ரூபாய் வழங்குவதாக உறுதி அளித்துள்ளனர். சில வேட்பாளர்களை நேரில் சந்தித்து அழைப்பு விடுத்துள்ளனர். அமைச்சர் பதவி தருவதாகவும் வாக்குறுதி அளித்து வலைவீசியுள்ளனர்.

தேர்தல் முடிவுக்கு முன் பா.ஜ.க. தன் தோல்வியை ஒப்புக்கொண்டுள்ளதை இது தெளிவாகக் காட்டுகிறது. அதனால்தான் இது போன்ற ஒன்றை முயல்கிறது. அத்தகைய அழைப்புகளைப் பதிவு செய்யவும், நேரில் சந்திக்கும் சந்திப்புகளை ஆவணப்படுத்த உளவு கேமராக்களை பயன்படுத்துமாறும் எங்கள் வேட்பாளர்களை அறிவுறுத்தியுள்ளோம்.

பிப்ரவரி 8ம் தேதி வரை காத்திருங்கள், ஆம் ஆத்மி கட்சி தீர்க்கமான பெரும்பான்மையுடன் அரசு அமைக்கும். கல்வி, மின்சாரம், தண்ணீர், சுகாதாரம் ஆகிய பிரச்சினைகளில் ஆம் ஆத்மி எடுத்த நிர்வாக முடிவுகளை மக்கள் ஆதரித்துள்ளனர்.

எங்கள் வாக்குறுதிகள் வாக்காளர்களிடம் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. தேர்தல் முடிவுகளில் அவை நிச்சயம் எதிரொலிக்கும்.

இவ்வாறு அவர் கூறினார்.



12ம் வகுப்பு மாணவர்களுக்கான செய்முறை தேர்வு இன்று தொடங்கியது. சேலம் கோட்டை அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் மாணவிகள் தேர்வு எழுதிய காட்சி.

### அதிகார துஷ்பிரயோகம் என புகார்:

# சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு அமெரிக்க அதிபர் டிரம்ப் தடை!

## சொத்தை முடக்கவும் உத்தரவு!!

வாஷிங்டன், பிப்.07–

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு அமெரிக்க அதிபர் டிரம்ப் தடை விதித்துள்ளார். அதிகார துஷ்பிரயோகம் செய்துள்ளதாகவும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை டிரம்ப் சாடியுள்ளார். மேலும் சர்வதேச குற்றவியல் நீதிமன்ற அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் சொத்துகளை முடக்கவும் டிரம்ப் உத்தரவுபிறப்பித்துள்ளார்.

கடந்த மாதம் அமெரிக்க அதிபராக இரண்டாவது முறையாக பதவியேற்றதில் இருந்து டிரம்ப் பல்வேறு நடவடிக்கைகளை தொடர்ச்சியாக எடுத்து வருகிறார்.

அந்த வரிசையில் தான் தற்போது சர்வதேச நீதிமன்றத்திற்குதடைவிதிக்க அவர் உத்தரவிட்டுள்ளார். அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடான இஸ்ரேலை குறிவைத்து தொடர் விசாரணைகளை நடத்தி வருவதாக அமெரிக்கா குற்றம்சாட்டியுள்ளது.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகுவுக்கு கைதுவாரண்ட்பிறப்பித்து இருப்பதன் மூலம் தனது அதிகாரத்தை நீதிமன்றம் துஷ்பிரயோகம் செய்துள்ளதாக தெரிவித்துள்ளது. முன்னதாக பெஞ்சமின் நேதன்யாகு அமெரிக்காவில் வைத்து அதிபர் டிரம்பைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார். அமெரிக்காவின் புதிய உத்தரவு காரணமாக சர்வதேச குற்றவியல் நீதிமன்ற அதிகாரிகள், ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நீதிமன்றத்தின் விசாரணைகளுக்கு உதவியதாகக் கருதப்படுபவர்களுக்கு எதிராக சொத்து முடக்கம் மற்றும் பயணத் தடைகள் பிறப்பிக்க ப்பட்டுள்ளன. பெஞ்சமின் நேதன்யாகு அமெரிக்காவின் வெள்ளை மாளிகை வருகைக்குப் பிறகு இந்த தடை உத்தரவுகள் வெளியாகி உள்ளன. இவை வெளிப்படையாகவே அமெரிக்கா இஸ்ரேல் இடையிலான நட்புறவை வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளன.

காசாவை கையகப்படுத்தி பாலஸ்தீனியர்களை மத்திய கிழக்கு நாடுகளுக்கு அனுப்ப திட்ட மிட்டுள்ளதாக அதிபர் டிரம்ப் அறிவித்து இருந்தார். அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நீதிமன்றத்தின் உறுப்பினர்கள் அல்ல. இது குறித்து சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தரப்பில் இதுவரை எந்த கருத்தும் தெரிவிக்கப்படவில்லை.

### திருப்பத்தூர் அருகே நிலத்தகராறில் பரிதாபம்:

# வீடு புகுந்து சரமாரியாக வெட்டியதில் தி.மு.க. பிரமுகர் படுகாயம்–மனைவி பலி!

## மர்ம நபர்களுக்கு வலைவீச்சு!!

திருப்பத்தூர், பிப்.07–

திருப்பத்தூர் அருகே ஏற்பட்ட நிலத்தகராறில் திமுக பிரமுகர் மற்றும் அவரது மனைவிக்கு சரமாரியாக அரிவாள் வெட்டு விழுந்தது. இதில் படுகாயம் அடைந்த திமுக பிரமுகர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். அவரது மனைவி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் அடுத்த மேற்கத்தியனூர் கோ.புளியம்பட்டி பகுதியைச் சேர்ந்தவர் திருப்பதி (50) ஊராட்சி மன்றத் துணைத் தலைவராகவும் மற்றும் திமுக துணை தலைவராகவும் உள்ளார். அவருடைய மனைவி வசந்தி (40) ஆகிய இருவரும் நேற்று வீட்டிலிருந்தபோது அடையாளம் தெரியாத மர்மநபர்கள் வீட்டில் உள்ளே புகுந்து திருப்பதி மற்றும் அவருடைய மனைவி ஆகிய இருவரையும் சரமாரியாக வெட்டி உள்ளனர்.

இதனால் இருவரும் கத்தி கதறி உள்ளனர் இதனால் அலறல் சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தினர் ஓடி வரும் போது அங்கிருந்து மர்ம நபர்கள் தப்பிச் சென்றுள்ளனர். இதனால் வீட்டிலேயே வசந்தி ரத்த வெள்ளத்தில் உயிர் இழந்தார் மேலும் உயிருக்கு ஆபத்தான நிலையில் திருப்பதி போராடிய நிலையில் அவரைமீட்டுதிருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். இவரை பரிசோதித்த மருத்துவர்கள் மேல் சிகிச்சைக்காக தர்மபுரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் போலீசாரின் முதற்கட்ட விசாரணையில் திருப்பதி வீட்டிற்கு முன்பு சுமார் 70 சென்ட் அளவிலான நிலம் உள்ளதாகவும் இந்த நிலையில் இரண்டு நாட்களாக பிரச்சினை இருந்து வந்ததாகவும் மேலும் இந்த நிலத்திலிருந்து தனக்கு 12 அடி அளவில் வழி வேண்டும் என்று கேட்டு வந்த நிலையில் இன்று அந்த வழிக்கான ரிஜிஸ்ட்ரேஷன் நடக்கவிருந்த நிலையில் மர்ம நபர்களால் திருப்பதி மற்றும் அவருடைய மனைவியை வெட்டியுள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

மேலும் சம்பவ இடத்தில் சுமார் 50க்கும் மேற்பட்ட போலீசார் குவிக்கப் பட்டுள்ளனர்.

**இன்றைய நிலவரம்**

| | | | |
|---|---|---|---|
| தங்கம் | 22 CT | 1 கிராம் | ரூ.7,390 |
| | | 8 கிராம் | ரூ.59,120 |
| | 24 CT | 1 கிராம் | ரூ.8,061 |
| வெள்ளி | | 1 கிராம் | ரூ.107.00 |

# ஆட்டத்தை 'அனுபவித்து' ஆட வேண்டும்! -சாய்பல்லவி.

இயக்குநர் சந்து மொண்டேட்டி இயக்கத்தில் உருவாகி இருக்கும் 'தண்டேல்' படத்தில் நாக சைதன்யா, சாய் பல்லவி, கருணாகரன், 'ஆடுகளம்' நரேன், பப்லு உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். உண்மை சம்பவங்களை தழுவி உணர்வுபூர்வமான காதல் கதையாக உருவாகியுள்ள இப்படம் குறித்து நாயகி சாய்பல்லவி கூறுகையில், ''இந்த கதையின் மூல வடிவத்தை 'கோவிட்' காலகட்டத்தில் இயக்குநர் சந்து மொண்டேட்டி என்னிடம் கொடுத்து படிக்கச் சொன்னார். அதில் என்ன சம்பவம் நடந்தது? என்ற விவரம் இடம் பிடித்திருந்தது. பாகிஸ்தானில் சிறைபிடிக்கப்பட்டிருக்கும் தங்களுடைய விருப்பத்திற்குரியவர்களை அவர்களுடைய மனைவிமார்கள் எப்படி எந்தவித தொடர்பும் இல்லாமல் மீட்டு வந்தார்கள் என்ற விசயம் இருந்தது. அதை படித்தவுடன் இதனை எப்போது செய்தாலும்.. இந்த உணர்வு ரசிகர்களுக்கு சரியான விதத்தில் சென்றடையும் என கணித்தேன்.

ஒவ்வொரு படத்திலும் எனது நடிப்பு முந்தைய படங்களை விட மேம்பட்டு வருகிறதே என கேட்கிறார்கள், அதற்கு காரணம்.. அந்தக் கதை.. அந்த கதாபாத்திரம்.. அதன் இயக்குநர்.. இந்த மூன்றும் தான் முக்கிய காரணம்.

அதே மாதிரி நடனத்தை பொறுத்தவரை, நான் நன்றாக ரசித்து ஆடுவேன். விஜய் சாரின் நடனத்தில் ஒரு தனி கிரேஸ் இருக்கும். அதை பார்க்கும் போது நாமும் ஆட வேண்டும் என்று தோன்றும். விஜய் சார் சிம்ரன் மேடம் நடனமாடும் போது அதை பார்த்து உற்சாகம் அடைந்திருக்கிறேன். நடன அசைவுகளை துல்லியமாக ஆட வேண்டும் என்பதை விட அதை அனுபவித்து ஆட வேண்டும் என எண்ணுவேன். இந்தப் படத்தில் பல நூறு நடன கலைஞர்களுடன் இணைந்து நடனமாடும் போது அது சவாலானதாகத் தான் இருந்தது. குறிப்பாக இந்த பாடலுக்கு நடனமாடும் போது என் சக கலைஞரான நாக சைதன்யா உடன் இணைந்து நிறைய ஒத்திகை பார்த்தோம். அந்தப் பாடலில் என்னை விட நாக சைதன்யா நன்றாகவே நடனமாடி இருக்கிறார். திரையுலகில் தொடர் வெற்றியின் ரகசியம் குறித்து சொல்லவேண்டுமென்றால் என்னைத் தேடி வரும் நல்ல கதைகள் எந்த மொழியில் இருந்தாலும் அதில் பங்களிப்பு செய்வேன். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விசயத்தை கற்றுக் கொண்டே தான் இருக்கிறேன். இவ்வாறு அவர் கூறினார் .

# 'கைதி–2' படத்தில் கமல்ஹாசன்!



தமிழில் கடந்த 2019-ல் லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில், கார்த்தி நடிப்பில் வெளியான 'கைதி' திரைப்படம் ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றது.ஆக்சன் திரில்லராக உருவான இப்படத்துக்கு சாம் சி.எஸ். இசையமைத்து இருந்தார். கதாநாயகி, பாடல் என எதுவுமே இல்லாமல், நடிகர் கார்த்தியை புதிய ஒரு பரிமாணத்தில் காட்டிய இப்படத்தின் 2-ம்பாகம் குறித்து தகவல்கள் ரசிகர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருந்தது. மேலும் கமல்- கூட்டணியில் வெளியான விக்ரம் படத்திலும் கைதி படத்தின் எல்சியு-வாக சில காட்சிகள் இடம் பெற்று இருந்தன. இந்நிலையில், இயக்குனர் லோகேஷ் கனகராஜ் தற்போது ரஜினியின் 'கூலி' படத்தை இயக்கி வருகிறார்.

இறுதிக்கட்டத்தில் உள்ள இப்படத்தின் படப்பிடிப்பு பணிகளை முடித்த பின்பு, கைதி 2 படத்தின் படப்பிடிப்பை தொடங்க உள்ளார். இப்படத்தில்,நடிகர் கமல்ஹாசன் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க உள்ளதாக தற்போது தகவல் வெளியாகி உள்ளது. இதுகுறித்து கமல்ஹாசனிடம் லோகேஷ் கனகராஜ் கேட்டதாகவும், அதற்கு கமல்,தேதியை முடிவு செய்து சொல்லுங்கள் வருகிறேன் என கூறியதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.இதன் காரணமாக இப்படத்தின் மீதான எதிர்பார்ப்பு அதிகமாகி உள்ளது.



சாய் பல்லவி

# ஒரு இரவில் நடக்கும் கிரைம் திரில்லர், 'அவன் இவள்'!

கள்வா', 'எனக்கொரு வொய்ப் வேணுமடா' ஆகிய குறும்படங்களை தொடர்ந்து ஜியா எழுதி, இசையமைத்து இயக்கியுள்ள 'அவன் இவள்' குறும்படம் வரும் பிப்ரவரி 8ம் தேதி யூடியூப் சேனலில் வெளியாகிறது. மரியம் தியேட்டர்ஸ் தயாரித்துள்ள இப்படத்தில் செபாஸ்டின் அந்தோணி, மீரா ராஜ், இசபெல்லா ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.இப்படம் குறித்து அதன் இயக்குனர் ஜியா கூறுகையில்,''ஒரு இரவில் நடக்கும் கிரைம் திரில்லராக இந்த குறும்படம் உருவாகியுள்ளது. இதற்கு முன் நான் இயக்கிய 'கள்வா', 'எனக்கொரு வொய்ப் வேணுமடா' ஆகிய இரு குறும்படங்களிலும் வசனங்களுக்கு முக்கியத்துவம் தரப்பட்டது. இதில் வசனம் குறைவாகவும் விஷுவல் கதை சொல்லல் அதிகமாகவும் இருக்கும். எனது முதல் இரண்டு குறும்படங்களைப் போல், இதுவும் முழுக்க கமர்ஷியல் அம்சத்தை கொண்ட படமாகும்'' என்றார். இப்படத்தின் ஒளிப்பதிவு மற்றும் படத்தொகுப்பை அபிஷேக் கையாண்டுள்ளார். இசை வடிவமைப்பு, சவுண்ட் மிக்ஸிங் கிலென் ரால்ப் செய்துள்ளார்.



# சிறுத்தை சிவா இயக்கத்தில் விஜய் சேதுபதி!





சூர்யா நடிப்பில், சிறுத்தை சிவா இயக்கத்தில் கடந்த ஆண்டு வெளியாகி பெரும் தோல்வியை சந்தித்த கங்குவா படத்தை தொடர்ந்து,அடுத்து சிறுத்தை சிவா, மீண்டும் அஜித்துடன் கூட்டணி அமைக்க உள்ளதாக இணையத்தில் தகவல்கள் வெளியான நிலையில், அஜித், அடுத்த 1 வருடத்திற்கு கார் பந்தய போட்டிகளில் கவனம் செலுத்தப் போவதாகவும், சிறுத்தை சிவா இயக்கத்தில் எந்த படத்திலும் நடிக்க போவதில்லை என்றும்,அடுத்ததாக வெங்கட் பிரபு அல்லது விஷ்ணுவர்தன் இயக்கும் படத்தில் நடிக்கலாம் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதையடுத்து சிறுத்தை சிவா, விஜய் சேதுபதியிடம் அதிரடி ஆக்சன் கதை ஒன்றை சொல்ல, அதில் இம்ப்ரஸாகிப் போன விஜய்சேதுபதியும் ஓ.கே. சொல்லிவிட்டார் என்கிறார்கள்.விரைவில் இப்படம் குறித்த அறிவிப்பு வெளியாகும் என்கிறார்கள்.

# நடிகர் கார்த்தியின் 29–வது படத்தில் வடிவேலு!

நடிகர் கார்த்தி நடிப்பில் சமீபத்தில் வெளியான 'மெய்யழகன்' ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது. இப்படத்தை தொடர்ந்து கார்த்தி,அடுத்ததாக, நலன் குமாரசாமி இயக்கத்தில், 'வா வாத்தியார்' படத்தில் நடித்து முடித்துள்ளார். இப்படம் விரைவில் வெளியாக உள்ளது. இதையடுத்து தற்போது 'சர்தார் 2' படத்தில் நடித்து வருகிறார்.இந்நிலையில்,கார்த்தி நடிக்கும் அவரது 29வது படத்தில் 'வைகைப்புயல்' வடிவேலு ஒரு முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இப்படத்தை, விக்ரம் பிரபு நடித்த 'டாணாக்காரன்' படத்தை இயக்கியநடிகரும் இயக்குனருமான தமிழ் இயக்கவுள்ளார். மாரி செல்வராஜின் 'மாமன்னன்' படத்தில் இடம்பெற்ற கதாபாத்திரம் போன்றே மீண்டும் ஒரு அழுத்தமான கதாபாத்திரத்தில் வடிவேலு இப்படத்தில் நடிக்க உள்ளார் என்கிறார்கள். மேலும், முதன்முறையாக நடிகர் கார்த்தியுடன், வடிவேலு இணைந்துள்ளது, கார்த்தி,வடிவேலு ரசிகர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

